217

Registered No. M. 1066.

உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்
ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக — திருக்குறள்.

தொகுதி ௪. } ஆனந்தவரு ஆனிமீ { பகுதி ௩

OFFICE OF THE REGISTRAR ... 13 JUNE 1914 ... MADRAS

பொருளடக்கம்.

பிரசங்கித்தலும் கல்விகற்றலும்—பத்திராதிபர்	௭௫
செய்ந்நன்றியறிதல்—நா. சுந்தரேசுவரய்யர்	௭௭
ஆங்கிலமுந்தமிழும்—அ. கோபாலையர்	௮௪
பொறுமை—சொ வேலுச்சாமிக்கவிராயர்	௮௮
காக்கை ஓர் பறவை—ஐ. எம். முருகய்யவாத்தியார்	௯௧
கமலினி—டி. எம். சங்கரலிங்கம் பிள்ளை பி. எ.	௯௫
ஒரு சந்தேக நிவிர்த்தி—மு. ரா. கந்தசாமிக்கவிராயர்	௧௦௦
திண்டுக்கல் தமிழ் வித்தியாசங்கத்தின் முதல் வருஷபூர்த்திக்கொண்டாட்டம் } திண்டுக்கல்வாசி	௧௦௧
சமாசாரக்கொத்து—பத்திராதிபர்	௧௦௨
புத்தகக்குறிப்பும், விளம்பரமும்—ஷை	௧௦௩
ஆத்மநாதன் அல்லது காந்திமதியின் காதல்—வி. கோபாலகிருஷ்ணபிள்ளை	

மு ரா கந்தசாமிக்கவிராயர்—புரொப்ரைட்டர்.

ம. கோபாலகிருஷ்ணையர்.
மு. ரா. கந்தசாமிக்கவிராயர். } பத்திராதிபர்.

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ இரண்டுதான்.
மாணாக்கர்கட்கு வருஷசந்தா ரூ 1-4-0 தனிப்பிரதி அணா 3.

Copy Right Registered.

ADVERTISEMENT.

நாகரீகமான காசி பட்டுப் புடவைகள்.

ரோஸ், வெள்ளை, சிவப்பு, ஊதா, பச்சை, வெங்காய வர்ணம், மேகவர்ணம், வெளிர் பச்சை, கத்திரிப்பூவர்ணம், மேகவர்ணம் போன்ற பல வர்ணங்களில் உடலும் உயர்த்தியான சரிகையினால் விளிம்பு கரையும் முகதலையுமுள்ள பட்டுப் புடவைகள் 16 முழம் நீளம் 42 இஞ்சு அகலம். விலை புடவை 1-க்கு ரூபா 25, 30, 35 வரை.

வெண்பட்டு வேஷ்டிகள்.

உடல் அழுத்தமும், அழகான கம்பிக்கரைகளுமுள்ளவை. சலவை செய்தாலும் திரைந்து கெட்டுப்போகாதனவும் நீடித்துப் பலம் செய்யக்கூடியனவுமானவை.

முழம்	அகலம்	1க்கு ரூபா	முழம்	அகலம்	1க்கு ரூபா
4	27-30 இஞ்சி	3.12 முதல் 4.	8	48.54 இஞ்சி	11 முதல் 12
6	44-45 ,,	6-8 7.	10	48-54 ,,	13 ,, 15
6	48-54 ,,	9 10.	16	44-48 ,, புடவை	20 ,, 25
7	48-54 ,,	10 11.			

உருத்திராக்ஷ ஜெப மாலைகள்.

108 பொடி உருத்திராக்ஷ மணிகள் கோத்த மாலைக்கு ஜெபமாலை என்று சொல்லுவது. விலை மாலை 1-க்கு 0-6-0, 0-8-0, 0-12-0, 1-0-0, 1-8 0 2-0-0, 2-8-0, 3-0-0, 3-8-0, 4-0-0, 5-0-0, 7-0 0, 10-0-0 வரை.

சுயமான கௌரி சங்க உருத்திராக்ஷம் 9, 10, 11, 12 முகங்களுள்ளது மணி 1-க்கு விலை ரூபா 3, 4, 5, 7, 10 வரை.

நயம் காபூல் பால்காயம் 10 தோலா டப்பா 1-க்கு விலை ரூ. 1.

நயம் தீபேத் கலப்பற்ற கஸ்தூரி தோலா 1-க்கு விலை ரூ. 40.

நயம் காஷ்மீர்தேசத்து குங்குமப்பூ தோலா 1-க்கு விலை ரூ. 2, 2½

காசி வயிரவர் கயிறு 1 நிர். 100-க்கு ரூ. 2—8—0.

காசி வயிரவர் கயிறு 2 நிர். 100-க்கு ரூ. 2—0—0.

குழந்தைகள் விளையாட்டுச் சாமான்.

பித்தளையினால் அழகாகச் செய்தது. ஒவ்வொரு கூட்டத்திலும் 32-வித சாமான்களடங்கியுள்ளன. விலை பெரியசயிஸ் 3-8-0. மத்திம சயிஸ் 2-0-0 சின்ன சயிஸ் 1-8-0 பலமும் கெட்டுப் போகாததும்.

☞ எங்கள் பெரிய கியாட்லாக்கை உடனே தருவித்துப் பாருங்கள். விலையின்றி அனுப்புவோம்.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,

ஸ்ரீ காசி.

K. S. Muthiah & Co., Benares City.

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED ... JUL 1914 MADRAS.

தொகுதி ௬ } ஆனந்த௵ ஆனிமீ { பகுதி ௩.

பிரசங்கித்தலும் கல்விகற்றலும்.

நமது தமிழ் நாட்டில் அநேக நகரங்களில் சபை கூட்டுவதிலும் பிரசங்கங்கள் நடத்துவதிலும் ஜனங்களுக்குள் ஒருவகை உற்சாகம் உண்டாகி வருகின்றது எங்குபார்த்தாலும் பிரசங்க அழைப்புப்பத்திரங்கள் உலாவுகின்றன. இந்த நாலைந்து வருஷ காலமாக மிகவும் அதிகப்பட்டு வருகிறதென்றே சொல்லலாம். இது நமது பாஷை வளர்ச்சிக்கும் அறிவு விருத்திக்கும் அநுகூலமானதே. ஆனால் நம்மவர்கள் உண்மையாகவே அறிவு விருத்தியடைய வேண்டுமானால் நூல்களை முறையாகக் கற்பதில் ஊக்கம் அதிகமாகக் கொள்ளவேண்டும். கிரமமாகக் கல்விகற்று விஷயங்களைத் தாம் தாம் உய்த்துணர்ந்து அதன் பின்னர் பிரசங்கிக்க வருவதே நிலைப்பதாகும். பிறர்க்குப் பயன்தருவதாகும். அங்ஙனமின்றி எழுதப் படிக்கத் தெரிந்தவுடன் உபந்யாசங்களாக அச்சிட்டு வெளிவந்திருக்கும்சில வசன புஸ்தகங்களையும், பன்னூற்றிரட்டுப் போன்ற சில செய்யுட் புஸ்தகங்களையும் வாங்கிப்பார்த்து உடனே தாமும் பிரசங்கியாக வேண்டுமென்ற விருப்பங்கொண்டு சபையேறிப் பேசத்தொடங்கிவிடுதல் அவ்வளவு நலமன்று. இங்ஙனம் செய்தல் அஸ்திவாரத்தைப் பலப்படுத்தாமல் மேலே பலமாக வீடுகட்டு வதையே யொக்கும். இக்காலத்தில் உண்மையாகவே கல்விகற்றுப் பிரசங்கிப்பவர்கள் மிகச்சிலரேயாவர். பெரும்பாலார் அஸ்திவாரபலஞ் செய்யாது வீடுகட்டுபவராகவே வருகின்றனர்.

எப்படியாவது சபையேறிப் பேசிவந்து விட்டால் அதுவே போது மெனக் கருது கின்றனர். இங்ஙனங் கருதுவது அறிவன்று. உலகத்திற்கு நன்மை செய்ய வேண்டு மென்ற விருப்பம் இருந்தாலும் செய்வதற்கு அறிவின்றுணை அவசியம் வேண்டும். அறிவு வளர்ச்சிக்கு வேண்டியதைச்செய்யாமல் காரியஞ் செய்யப் புகுந்தால் செய்யு முறைதவறும். தவறவே நன்மையும் தீமையாகும். அதுவரை செய்த முயற்சி யெல்லாம் நிஷ்பிரயோசனமாகும். உலக மதிப்புக்குப் பதில் அவமதிப்பை யுண்டாக்கும். "நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர், பண்பறிந் தாற்றாக் கடை" என்பது தேவர்திருவாக்கு.

நமது கலாசாலை மாணாக்கர்கள் பலரும் உபந்நியசிக்கப் பழக வேண்டியது மிகவும் அவசியம். சபையிலேயேறி நின்றவுடன் நன்றாகக் கற்றவர்களுங்கூட பழக்கக் குறைவால் கால் கை நடுக்கெடுத்து நாவெழாமல் நிற்றலை நாம் சில வேளை காண்கின்றோம். ஆதலின் சபைக் கூச்சம் நீங்க வேண்டி ஆரம்ப முதலே பலர் கூடிய சபைகளில் பேசப்பழகுதல் மிக அவசியந்தான். ஆனால் அதையேயொரு பெரிய பாடமாகப் பலநாள் வருந்திப் படிப்பித்தல் கூடாது. அப்படிச் செய்தால் அவர்கள் கற்றற் குரியகாலத்தில் பெரும் பாகம் இதில் செலவிடப்படும். கல்விகற்றலிலே தான் காலத்தை யதிகமாகச் செலவிட வேண்டும். சிற்சில காலங்களில் பிரசங்கப் பழக்கமும் செய்வித்தல் வேண்டும். குருட்டுப்பாடம் பண்ணிப் பிரசங்கிக்கச் செய்வதில் காலத்தை மிகச் செலவிடலாகாது. கற்றவர்கள் உபந்யாசங்களைப் பல முறை கேட்க வேண்டும். "செல்வத்துட் செல்வஞ் செவிச் செல்வம்." ஆதலால் தக்கவித்துவான்கள் பிரசங்கங்களைக் கேட்டுவருவதால் தம்மறிவு விருத்திக்குச் சிறந்த துணையாகும். கேட்குங் காலத்து மனத்தை வேறு வழியிற் செலவிடாதும் அலட்சியஞ் செய்யாதும் கவனமாகக் கேட்க வேண்டும். கேட்டவற்றை யெல்லாம் பின்னர் தனியாயிருந்து சிந்திக்கவும் வேண்டும்.

இங்ஙன மின்றி ஆயிரக் கணக்கான பொருளைச் செலவிட்டுச் சபைகூட்டி ஆடம்பரஞ்செய்து சோடா லெம்னெட் புட்டிகளை யுடைத்து விடுவதும் காராப்பூந்தி லட்டுவகைகளை வயிற்றிலடைப்பதுமே பெரியகாரியமாகக் கொண்டு நடத்துவது வீணான காரியமேயாகும்.

சபைகூட்டிப் பிரசங்கிக்கச் செய்வது போலவே ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது ஏதேனுமொரு நூலை முறையாகப் படித்துவரவேண்டும். இந்த விஷயத்தில் நம்மவர்கள் சரியானபடி கவனஞ் செலுத்துவதாகத் தெரியவில்லை. நமது மக்களையெல்லாம் முறையாகக் கற்கும்படி செய்யவேண்டும். அதற்கேற்ற கலாசாலைகளை யமைத்துத் தக்கபடி பரிபாலிக்க வேண்டும். கல்வி சம்பந்தமாக நாம் செய்யும் கடமைகளில் முதலாவதாகக் கல்வி கற்றல் கற்பித்தல்களையும், இரண்டாவதாக உபந்யாசம் செய்தல் கேட்டல்களையும் நினைத்துக் கடைப்பிடிக்க வேண்டும். இம்முறை மாறி நடைபெறுகின்றது. இவ்விதம் மாறுதலாகவே நடைபெறுமானால் நாமும் நம்மக்களும் அறிவால் சிறப்படைய இடமில்லாது போகும். ஒரு சபையில் அங்கத்தவர்களாக வருகின்றவர்களெல்லாம் தினம் அல்லது வாரத்திலிரு முறையாவது ஒன்றுகூடி கிரமமாக யாதானுமோர் நூலை ஆராய்ந்து வரவேண்டும். இங்ஙனமே சிலவருஷ காலம் நடைபெறுமானால் பாஷையும் வளர்ச்சி பெறும். நமது அறிவும் கிளர்ச்சியுறும். நம்மவர் கவனிப்பாராக.

பத்திராதிபர்.

செய்ந்நன்றி யறிதல்.

எய்தற்கரிய இம்மானிடப் பிறவிக்கு இன்றியமையாது வேண்டத்தக்க அறம் பொருளின்ப மென்னும் புருஷார்த்தங்கள் நான்கனுள்ளே முதலிற் குறிக்கப்பட்ட அறமானது ஆன்றோர்களால் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சுருங்கக் கூறுவோமாயின், இவ்வறம் மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலும் என இருபகுதிப்படும் எனலாம். இவ்விருதிறத்து அறங்களும் மனமொழி மெய்கள் ஒத்த வழியே பூர்த்தி பெறுவதாகும். ஆனால், இவற்றுள், மனச்செய லொன்றுன் மட்டும் மாட்சிமை பெறக் கூடிய மகாதர்மம் ஒன்றுண்டு. அதுவே செய்ந்நன்றியறிதல் எனப்படுவது. செய்ந்நன்றி யறிதலாவது, ஒருவன் தனக்குச் செய்த நன்மையை என்றும் மறவாதிருத்தலாகும். இவ்வறத்திற்கு நினைப்பொன்றே இன்றியமையாது வேண்டத்தக்க தென்ப

தற்கு, செய்ந்நன்றி யறிந்து செய்தல் என்னாது, செய்ந்நன்றி யறிதல் என முன்னோர் இதற்குப் பெயர் வழங்கியதே தக்க சான்றாகும். ஒருவன் தனக்குச் செய்த பேருதவிக்குப் பிரதி செய்யவும் உபசார மொழி கூறவும் சக்தியற்றவனாயிருப்பினும், உபகாரஸ்மிருதி என்னும் நினைப்பொன்று மட்டும் அவன்கணுண்டாயின், அதுவே இவ்வுத்தம தர்மத்தை நிலைநாட்ட வல்லதென உணர்க. இதனால், சக்தி யிருந்து பிரதி செய்யாதவழி, அஃது இத்தர்மத்திற்கு விரோதமா மென்க.

இங்ஙனம், உலகத்தறங்கள் பெரும் பான்மையும் திரிகரணங்களும் ஒருவழிப்பட்ட வழியே பூர்த்தி பெறுவதாயிருக்க, இதற்கு அறிதலை மட்டும் கூறியதில் ஒரு கருத்துண்டு. இவ்வுலகமானது, பரஸ்பர வுதவி என்னும் கட்டுப்பாடொன்றானே நிலைத்துள தென்பதும், அப்பிணிப்பின்றேல், உலக யாத்திரையே நிகழா தென்பதும் துணிபாம். இங்ஙனம் உலக நடைபேற்றுக்கு ஆவசியகமான உதவிகளைப் பிறரிடத்தினின்று பெறுமுறையே தாமும் பிறர்க்கு ஒல்லும் வாயெல்லாம் உதவுதலே 'ஒப்புரவு' என்று கூறப்படும். இவ்வொப்புரவாகிய கடமை உலகத்து வளர்ச்சி பெறவேண்டுமாயின், அதற்கு உபகாரஸ்மிருதியாகிய நன்றி யறிதல் என்னும் உத்தமகுணம் இன்றியமையாததாகும். இனி, இந்நன்றியின்பாகுபாடுகளையும், அந்நன்றி பெறுவோர் இயல்புகளையும் ஆராய்வோம்.

மேன்மக்களாற் செய்யப்படும் நன்றியை மூன்று வகையாகக் கொள்ளலாம். அவை, பயனோக்காது செய்வன, காலத்தாற் செய்வன, பயன் தூக்கிச் செய்வன என்பனவாம். தாய் தந்தையர் புரியும் பேருதவி போன்றவை இப்பகுதிக்கேற்ற உதாரணங்கள். பெற்றோர் புரியும் பெரு நன்றி கடமை யொன்றைப் பற்றியதன்றி வேறு பயன் கருதுவதாமோ? அவர்கள் மக்கட் பேற்றுக்காகத் தவம்புரிந்து பெற்று வளர்த்துக் கற்பித்து மக்களாக்கி மகிழ்வதையும், அன்னோரது க்ஷேம லாபாதிகளைத் தம்மதாகக் கருதிப் பாராட்டு முறையையும் சிறிது எண்ணுவோமாயின், எத்தனை கோடி ஜன்ம மெடுப்பினும் அதற்குப் பிரதி செய்ய வியலுமோ?

"ஈன்று வளர்த்த..............கியையாதே"

பயனோக்காதே பெருங் கொடை பூண்டு விளங்கிய பெருவள்ளல்களாகிய பாரி, பேகன் முதலியவர்களும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கார்.

முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
இரவாம லீந்த விறைவர்போ னீயுங்
கரவாம லீகை கடன்.

எனவும், "உண்டா லம்மவிவ் வுலகம்.....தமக்கென வாழா நோன்றாட்-பிறர்க்கென முயலுநருண்மை யானே" எனவும், 'இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்-அறவிலை வாணிக னாஅய் அல்லன்-பிறரும் சான்றோர் சென்ற நெறியென-ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே" எனவும் வரும் முன்னோர் வாக்குகள் அறியத்தக்கன. தமக்குள் முன் செய்யப்பட்ட உதவியை நினைத்தும், பின் செய்யப்படும் உதவியை எதிர்பார்த்தும் நிகழாத உபகாரமே மேற்குறித்த பெற்றோர் முதலியோரன. இவ்வுத்தமச் செயலையே,

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது"

"பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது

என்று தேவரும் வியந்தருளிச் செய்வாராயினர். ஐகிகமாகிய உலகியன் முறையில் பெற்றோர் முதலியோர் செய்வன போல, ஆமுஷ்மிகத்தில் உதவுவது ஞானசாரியரது மகோபகார மென்க.

இனிக் காலத்தாற செய்யப்படும் நன்றியாவது, ஒருவனது ஆபத்துக்காலத்தில் உதவுவதாகும். நீரற்ற பாலைவனத்துச் சென்றொருவன் பெருந்தாகத்தாற் சோர்ந்த மரணத்தறுவாயை அடையு நிலையில், உபகாரி யொருவன் நீருடன் வந்து உற்றுழியுதவி அவனைப் பிழைப்பித்தல் போல்வதை இதற்குக் கொள்க. இங்ஙனம் மரண நிலையில் உள்ளானொருவன் உலக முழுதாளுமரசனாயிருந்து, அவனது தாகாவஸ்தைக்கு தானாளும் நீர் சூழ்ந்த நிலவுலகத்தையே அளிக்கச் சித்தனாயினும், அவனுக்கு வேண்டியுள்ள சிறிது நீருக்கு இணையாமோ அவன் பிரதியுபகாரம், இது பற்றியே தெய்வப்

புலவரும், "காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்—ஞாலத்தின் மாணப் பெரிது" என இவ்வுபகாரப்பெருமையைப்பாராட்டியருளினர். காலத்தால் உதவும் இந்நன்றி பயனோக்காமலும் பயனோக்கியும் நிகழக் கூடியதாதலால், இதனை பயன்றூக்காது செய்வதற்கு அடுத்த தரத்ததாக வைக்கலாம். நீரற்ற வனாந்தரங்களில் அரசர் செல்ல நேர்ந்தபோது, அவர்களது விடாய்க் காலத்தில் சமீபித்து தவிய உபகாரிகள் பலர் அவ்வரசரால் ஊர் முதலிய பிரதியுபகாரங்களைப் பெற்றிருத்தல் காண்டுமாதலின், இவ்வுதவி ஒரோ வழிப் பயன்றூக்கியதாதலுங் கண்டுகொள்க.

இனி மூன்றாவது பயன்றூக்கிச்செய்யும் உதவியாகும் வரி முதலியனபெற்று உயிர்களையோம்பும் அரசரது உதவிபோன்றன வெல்லாம் இப்பகுப்பின்பாற்படும். இங்ஙனம் உபகரிப்போன் எதிர்பார்க்கும்பயன், முன் ஒருவன்தனக்குச்செய்த உதவியைநினைந்து செய்வதும், பின்னர்த் தனக்கு உண்டாகும் விளைவு கருதிச் செய்வதும் என இருவகையாம். இங்ஙனம், பயனோக்கியதுபற்றி முன்னிரண்டனையும் நோக்க இது தாழ்ந்ததாயினும், தனித்துநோக்குமிடத்துப் பெருமையுடையது என்னத் தடையில்லை.

இவற்றால் உபகாரத்தின் மூன்று வகைகளை நாம் ஒருவாறு உணரலாம். உதவுவோரெல்லாம் இப்பகுதியினருள் ஒருவராய், அது அதற்கேற்ற புகழையும் புண்ணியங்களையும் அடைதற்குரியர். ஆனல், உபகாரிகளுள் மூன்று பிரிவினர் உள்ளவாறுபோல, அவ்வவ்வுபகாரத் திறத்திற்கேற்பப் பெறுவோனிடத்து உபகாரஸ்மிருதியும் அளவுபடுவதன்றாம். அஃதாவது, தலையான நன்றி செய்தவர்க்குத் தலையான நன்றி பாராட்டுதலென்றும், இடையான நன்றி செய்தவர்க்கு இடையான நன்றி பாராட்டுதலென்றும் இம்முறை கிடையாதென்பதாம். "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் - கொள்வர் பயன்றெரி வார்" என்றபடி, செய்யப்படும் நன்றி சிறிதாயினும் அதனை மிகப் பெரிதாகக் கொள்ளுதலும் "எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண் - விழுமந் துடைத்தவர் நட்பு" என்றபடி, பெற்ற நன்றியை எழெழு பிறவிகளிலும் மறவாமையும் நன்றி பெறுவோன் கொண்டொழுகற்குரிய கடமையாகும்; இவ்வளவேயோ! ஒருவன் தனக்கு நன்மை சிறிதே

செய்த தீமை பெரிது செய்தவிடத்து அத்தீமையை அடியோடு மறந்து நன்றி யொன்றை மட்டும் மறவாது நினைத்தொழுகுதல் நன்றியறிதலிலக்கணமாகும்.

“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல - தன்றே மறப்பது நன்று”. “கொன்றன்ன வின்னா செயினும் பிறர்செய்த - ஒன்று நன்றுள்ளக் கெடும்” என்னும தேயர் திருவாக்குகளை நோக்குக.

இங்ஙனம் கூறப்பட்ட நன்றியறிதலென்பது, நன்மக்களிடத்து இயற்கையினிகழும் கடமைக் குணமேயன்றி, அக்குணத்தாற் பெறும் பயன் கருதி நிகழ்த்தப்படும் தர்மங்களுள் ஒன்றன்று. செய்ந்நன்றியறிந்தொழுகல் புண்ணியமாய் மறுமைப்பயன் விளைப்பதாகலின், அதனை நாம் கைக்கொள்ளற்பாலம் என்று கருதி நிகழ்த்தப்படுமாயின் அது பொய்ம்மைப்பட்டுப் புரைபடுவதாம். ஆதலால் நித்திய கர்மாதிகள்போல, செய்த வழிப்பயனளிப்பதின்றிச் செய்யாவழிப் பழிபாவங்களை விளைக்குந் தர்மங்களுள்ளே இது தலைசிறந்ததாதல் எவ்வாறெனின், ஏனைய அறங்களைக்கொண்டொழுகுவதில் ஒருவனுக்குத் தவறு நேருமாயின் அக்குற்றத்தைப் போக்கிக் கொள்ளற்கு நூல்களிற் பிராயச்சித்தங்கள் விதிக்கப்பட்டிருத்தலைக் காணலாம்; மற்று, இச்செய்ந்நன்றியறிதற்கோ, அதனிற் சிறுகுறை நேரினும் பிராயச்சித்தம் இல்லையாதலின், இஃது உய்தியில் குற்றமென்று நூல்கள் வற்புத்துகின்றன.

இக்கருத்தை—

“எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு”.

“ஆன்முலை யறுத்த வறனில் லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றார்க்கு உய்தி யில்லென
அறம் பாடின்றே”.

“சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவைமாரை
வதைபுரி குநர்க்கு முண்டோ மாற்றலா மாற்றன் மாயா
வுதவிகொன் றார்க்கொன் றேனு முய்யலாம்உபாயமுண்டோ.”

என்பன முதலிய ஆன்றோர் திருவாக்குகளால் அறிக இவற்றுள், செய்ந்நன்றி கோறல், உதவி கோறல் என, உபகாரஸ்மிருதி யின்மையை கொலைச்செயலாக முன்னோர் வழங்கியிருத்தலும், இதன் கொடுமை வெள்ளிடை மலைபோல் விளக்குதல் அறியத்தக்கது.

பிறரால் நமக்குச் செய்யப்பட்ட தீமைகளடியாகத் துன்பமேயன்றி ஓரோவழிப் பெருநன்மை விளைதலுமுண்டு. இது நம்மனுபவ சித்தத்தில் பல சமயங்களிலும் அறிந்ததே. இங்ஙனம் தீமையினின்று விளையும் நன்மையையும் ஒரு பேருதவியாகக் கருதி நன்றிபறிதல் காட்டுவது உத்தமமக்களது கடமையாகக் காண்போமாயின், பிறரால் உண்மையில் உள்ளன்போடு புரியப்பட்ட நன்மையை நாம் எவ்வாறு பாராட்டக் கடமைப்பட்டிருத்தல் வேண்டும். இராவணன் புரிந்த பெருங்கொடுமைகட்கு ஆற்றாது, அவனிளவல் விபீடணன் “மனையும் பெருஞ் செல்வமும் மக்களும் மற்றை வாழ்வுந்” துறந்து இலங்கையிடத்தை விட்டு நீங்கி இராமபிரான் திருவடிகளைச் சரண்புக்க போது, அவன் கூறிபதாகக் கம்பநாடர் பாடிய செய்யுள் அடியில் வருவது.

“மின்மினி யொளியின் மாயும் பிறவியை வேரின்வாங்கச்
செம்மணி மகுடநீக்கித் திருவடி புனைந்த செல்வன்
தன்முனர் கமலக் தண்ணல் தாதையார் சரணந்தாழ
என்முனர் எனக்குச் செய்த வுதவியென் றேம்பலுற்றான்”

தன் தமையன் புரிந்த பெருந்தீமையே, கிடைத்தற்கரிய இராகவன் திருவடிகளிற் றன்னைச் சரணடையச்செய்து தன்னை உய்வித்ததென்று விபீடணன் கருதியது இதனால் விளங்கும். இதற்கு மற்றொரு சிறந்த திருஷ்டாந்தமும் உண்டு. சைவசமய பரமாசாரியராகிய ஸ்ரீ அப்பர் சுவாமிகள் சூலை நோயாற் றுன்புற்று, அத்துன்பமடியாகச் சிவபிரான் திருவருளை பெற்றபோது,

"பொய்வாய்மை பெருக்கிப் புன்சமயப் பொறியில் சமணீசர் புறத்துறையாம், அவ்வாழ்குழி யின்கண் விழுந்தெழுமா றறியாது மயங்கி யவம்புரிவேன், மைவாச நறுங்குழன் மாமலைபாண் மணவாளன் மலர்க்கழல் வந்தடையும், இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக் கெதிர்செய்குறை யென்கொல் எனத்தொழுவார்."

என்று அருளிச்செய்தது உருகியதாக சேக்கிழார் சுவாமிகள் அற்புதமாகத் திருவாய் மலர்ந்தனர். செய்ந்நன்றி யறிதல் என்னும் உத்தமதர்மத்தின் சூக்ஷ்மம் இலதாயின், அதன் அருமை பெருமைமுழுமையும் நம்மால் அளவிட வல்லனவோ?

இவ்வுத்தம தர்மமாகிய உபகாரஸ்மிருதியானது, இம்மை யொன்றின் மட்டுமோ விளங்குவது, நிரதிசயானந்தமாகிய மோக்ஷ நிலையினும் இஃதொன்றே பிரகாசித்து நிற்பதாகும். அநாதிமல பெத்தனான ஆன்மா இறைவனது பேரருளால் முத்தியடைந்த காலத்துச் செய்யத்தக்க தெல்லாம், அவ்விறைவன் தன்மாட்டுச் செய்த பேரருளை நினைந்து நினைந்து உள்ளம் கசிந்துருகிக் கிடத்தலொன்றே யாம். இவ்வுபகார ஸ்மிருதியே ஆன்மாவின் முத்தியனுபவம் என்பது, சைவ சித்தாந்தம் வல்ல பெரியோர் வாயிலாக அறிந்து மகிழ்தற்பாலது. இங்ஙனம் இறைவன் திருவருளை நினைந்துருகும் பெருநிலையை ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான்

"யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழா மடியேனை—யாவரும்
பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென் னெம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை" எனவும், அப்பர் சுவாமிகள்

"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருத்துறைக் கோயிலான்
தன்கடன் னடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே."

எனவும் அருளியிருத்தல் கண்டுகொள்க.

நா. சுந்தரேசுவரய்யர்.

ஆங்கிலமுந் தமிழும்.

மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய்வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்

மனிதர் ஒருவர் அபிப்பிராயத்தை மற்றொருவர்க் கறிவித்தற் காதாரமாயுள்ளது பாஷை அல்லது மொழியெனப்படும். உலகத்தில் வழங்கும் பாஷைகள் பல. அவையெல்லாம் மூலபாஷை, கிளைப்பாஷை யென்னும் இவ்விரு பிரிவினுள் அடங்கும். மூலபாஷைகள் கடவுளால் உண்டாக்கப்பட்டவை யாதலால், தெய்வத்தன்மை பொருந்தியனவாம்; கிளைப்பாஷைகள், அம்மூலபாஷைகளினின்றும் பிரித்து அவ்வக்காலத்துள்ள மேதாவிகளால் உண்டாக்கப்பட்டவை. மூலபாஷைகள் தொன்று தொட்டுவந்த இலக்கணமுடையனவாயிருக்கும். கிளைப்பாஷைக்கிலக்கணம் அவ்வக்காலத்தில் இயற்றப்படும். இவற்றுட்சில இலக்கணமின்றியும் வழங்கும்.

இவ்விந்தியாவில் தொன்று தொட்டு வழங்கும் பாஷைகளுள் ஆரியமுந் தமிழும் மூலபாஷைகளாம். இவற்றுள் ஆரியம் வடக்கே வழங்கியதனால் வடமொழியென்றும், தமிழ் தெற்கே வழங்கியதனால் தென்மொழியென்றும் பெயர்பெற்றன. திருவேங்கடமலைக்கு வடக்கிலுள்ள பிரதேசங்கட்கு ஆரியமொழியும், அதன் தெற்கிலுள்ள பிரதேசங்கட்குத் தமிழ்மொழியும் உரியவை. ஆரியத்திற்குக் கிளைப்பாஷைகள் ஹிந்தி முதலியனவாம். தமிழுக்குக்கிளைப்பாஷைகளுள் பிரதானமானவை கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவு என்பன. இந்நான்கு பாஷைகளும் திருவேங்கடத்திற்குத் தெற்கே, மேற்குச் சமுத்திரக் கரையோரங்களிலும், மத்தியப்பிரதேசங்களிலும் வழங்கப்பெறுகின்றன. தமிழ், கிழக்குச்சமுத்திரமாகிய வங்காளக்குடாக்கடலோரங்களில் வழங்கப்பெறுகின்றது. மூலபாஷையாகிய தமிழே பேசப்படும் இடம் செந்தமிழ்நாடென்று சிறப்பித்துச் சொல்லப்படும். நாம் வசிக்கும் இவ்விடமெல்லாஞ் செந்தமிழ்நாடே. மற்றைக் கிளைப்பாஷை வழங்கும் இடங்களைவிட்டுச் செந்தமிழ் நாட்டில் நாம் பிறந்து வளர்வது நமக்கொரு புக

மாம். ஒரு காலத்தில் இந்தியாவெங்கும் தமிழே வழங்கிற்றென் பது ஒரு சாரார் கொள்கை. அஃதெப்படி யிருப்பினும், தமிழ் தொன்றுதொட்டு இவ்விந்தியாவில் வழங்கிவரும் தனிப்பாஷையெ ன்பதற்கையமில்லை. ஐரோப்பாவுக்குரிய ஆங்கிலமோ மூன்று நூற் றுண்டுகளுக்கு முன்னர் இத்தேசத்திற்கு வந்து சிறிது சிறிதாக விருத்தியாகி இப்பொழுது இந்தியா முழுவதும் வழங்குகின்றது. இது நமக்குரிய இராஜபாஷை ஆகவே இந்நாட்டில் நம் தாய்ப்பா ஷையாகிய தமிழும், இராஜபாஷையாகிய ஆங்கிலமும் வழங்குகின் றன. இவற்றுள்,

நம் தாய்ப்பாஷையாகிய தமிழ் எல்லாம் வல்ல இறைவனுகிய பரமசிவனால் ஆதிகாலத்தே உண்டாக்கப்பெற்றது. இதற்கு அகத் திய மாமுனிவர் முதலிய பலர் இலக்கணஞ் செய்திருக்கின்றனர். சிவபிரானும் தம் பெயரால் இறையனாகப் பொருளென்றொரு இலக் கணநூல் இயற்றியருளினர். இவ்வாறு இலக்கணத்தால் நிரம்பிய நம் தமிழ்மொழி முற்காலத்தே முதற்சங்கம், இடைச்சங்கம், கடை ச்சங்கம் எனப்பெயர்பெற்ற மூன்று சங்கங்களால்வளர்க்கப்பெற்றுத் தனிப்பாஷையாக வழங்கிற்று. இதனை, கடைச்சங்க நூல்களாகிய புறநானூறு கலித்தொகை முதலியவற்றிலுள்ள பல பாடல்களா லும் அறியலாம். உ-ம்:—

நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்குங்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
னெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழவோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமண னல்கிய வளனே. (புறம் ௱௬௰௩)

இது பெருஞ் சித்திரனர் என்னும் புலவர், குமணன் என்னும் வள்ளலைப் பாடிப்பெற்ற பரிசிலைக்கொணர்ந்து மனையாளுக்குக் காட் டிச் சொல்லியது. இப்பாட்டில் வடமொழிப் பதம் ஒன்றேனுங்

கலக்கவில்லை. அக்காலத்துச் சங்கப்புலவர்களிற் பலர்வடமொழி வல்லுநராயிருந்தும் இக்காலத்து ஆங்கிலம் நன்குகற்ற தமிழர் அவ்வாங்கிலம் பேசும்பொழுது தமிழ் கலவாது இலக்கிணத்திற்குப் பொருந்தப்பேசுதல் போல, அவ்வடமொழி விரவாது கவிபாடி யிருக்கின்றனர். கடைச்சங்கத் திறுதிக்காலத்தே தமிழில் வடமொழிப் பதங்கலக்கத்தொடங்கிப் பின்னர் ஜயினர் புத்தர் காலத்தும் வடமொழிப்புராண இதிகாசங்களின் மொழிபெயர்ப்புக்காலத்தும் அக்கலப்பு முறையே பெருகிற்று. இதனை,

பாத நாத வேத பரத்து வாச னென்பான்
விரத வேள்வி தன்னின் மேன கையா ளான
சுரத தாது விழ்ந்த துரோண கும்பந் தன்னில்
வரத னொருவன் வந்தான் வசிட்ட முனிவை யொப்பான்.

என்னும் வில்லிபாரதச் செய்யுளாலும் பிறவற்றாலும் அறியலாம். இப்பொழுதோ நம் தமிழ், துருக்கு ஆங்கிலம் முதலிய பாஷைகளோடுங் கலந்து வழங்குகின்றது. இதற்குக் காரணம் மிருதியும் ஆதரிப்பாரின்மையேயாம்.

முச்சங்கக் காலத்தில் தமிழ்மூவேந்தரென்று சிறப்பித்துச் சொல்லப்படும் சேர சோழ பாண்டியர்கள் தமிழை மிகவும்போற்றி வளர்த்தார்கள். இடையே ஒரு காலத்திற் கன்னியாகுமரிக்குத் தெற்கே யிருந்த விசாலமான தமிழ்நிலத்தைக் கடல்கொண்டது. அதனாற் சில நூல்கள் இறந்தனவாயினும் பின்னர் வேறு நூல்கள் உண்டாயின. அதன் பின்னர்த் துருக்கர் காலத்தில் நம் தமிழ் நூல்கள் பல நீர்க்கும் நெருப்புக்கும் இரையாயின. இப்பொழுது சில காலமாக நம் தமிழ்நாடு காருணியம் பொருந்திய பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டிருக்கின்றது. இவ்வரசாட்சிக்குட்பட்ட பிறகு தமிழ் நூல்கள் நீர்க்கும் நெருப்புக்கும் இரையாகாமற் காக்கப்படுகின்றன. இவ்வரசாட்சியின்பயனாக அச்சுக்கூடங்கள் ஏற்பட்டிருத்தலால் நூல்களெல்லாம் அச்சிலேறி ஒன்று பத்து நூறாயிரமாக வெளிப்படுகின்றன. பழைய நூல்களையெல்லாம் அச்சியற்றினவர்களிற் றலைமையானவர் மகாவித்துவான்களாகிய ஸ்ரீ சரவணப்பெருமாளையரவர்களும்

மகாலிங்கையரவர்களும் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களும் ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களும், ஈண்டு அக்கிராஸனாதிபதியா யெழுந்தருளியிருக்கும் மஹாமஹோபாத்தியாயர் ஸ்ரீ வே. சாமிநாதையரவர்களுமாவர். இவ்வைவரில் ஐயரவர்கள் பரிசோதித்து அச்சிபற்றியுள்ள புத்தகங்களின் அருமை ஈண்டுக் கூடியிருக்கும் புலவர்களுக்கும் தமிழபிமானிகளுக்குந் தெரியுமாதலால் அதனைப்பற்றி நான் எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை. இவ்வாறு பெரியோர்கள் அல்லும் பகலும் ஆராய்ந்து நூல்களை வெளிப்படுத்தியும் அவற்றைப் படிப்பாரில்லாக் குறை மிகவும் கவலையைத்தருகின்றது. நம் நாடு அந்நியருடைய ஆட்சிக்குட்பட்ட பிறகு தமிழிலக்கிய விலக்கண நூல்களை முறையாக அரசாங்கத்தார் கற்பிக்காவிடினும் மடாதிபதிகளும் சிலபிரபுக்களும் உதவிசெய்து கற்பித்ததனாலே அங்கங்கே சிலவித்துவான்கள் காணப்பட்டார்கள்; இப்பொழுதுங்காணப்படுகிறார்கள். மேலே சொன்ன மடாதிபதிகளுக்குள் திருவாவடுதுறை யாதீனத்தார் மிகச்சிறந்தவர்கள். அங்கே சிவஞான யோகிகள் முதலிய பல பிரபல வித்துவான்கள் இருந்திருக்கிறார்கள். இப்பொழுது வித்துவான்களுக் கெல்லாம் சிரோ பூஷணமாயீண்டெழுந்தருளி யிருக்கின்ற அக்கிராஸனாதிபதி யவர்களும் அவ்வாதீனத்திற் கல்வி பயின்றவர்களே. இத்தகைய மஹான்கள் சிலராலேயே நம் தமிழ் நூல்கள் ஒருவாறு காக்கப்படுகின்றன. சங்க நூல்களிற் பலவற்றை இவர்கள் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள், வெளிப்படுத்துகிறார்கள்; இனியும் வெளிப்படுத்துவார்கள். தமிழ் ஐம்பெருங் காப்பியங்களுள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை யென்னும் மூன்றையும் வெளிப்படுத்திவிட்டார்கள். வளையாபதி, குண்டல கேசியென்னும் இரண்டும் இன்னுங்கிடைக்காமையால் வெளிப்படுத்தப்படவில்லை. அவையும் அவைபோன்ற வேறு பல நூல்களும், எடுப்பாரும் படிப்பாரும் இன்மையால் சிதல்வாய்ப்பட்டு மண்ணின் மடிந்தனபோலும். இதனால் நம் தமிழ் நூல்களுக்கு ஐம்பூதங்களில் முன்சொன்ன நெருப்பும் நீருமே யன்றி மண்ணும் பகையாயிற்றென்பது போதரும்.

(இன்னும் வரும்)

அ. கோபாலையர்.

பொறுமை.

பொறுமையாவது காரணம் பற்றியாதல் மடமையானாதல் ஒருவன் தமக்கு மிகைசெய்த வழித் தாமும் அதனை அவன்கட் செய்யாது பொறுத்தல். மிகையாவது கடுஞ்செயலும் கடுஞ்சொல்லுமாம். தமக்குத் தீங்கு செய்வோனுக்குத் தீங்கு செய்யின் தாமும் அவனோடொப்ப ஆன்றோரான் நன்கு மதிக்கப்படாமலும் செயல் சிறிதாயினும் பாவம் பெரிதாகப் பெற்றும் இம்மை மறுமைப் பயன்களையிழத்தலானும் "தீங்குவந் தடையுமாறு நன்மை தான் சேருமாறுந், தாங்கள்செய் வினைபினாலே தத்தமக் காய வல்லா, லாங்கவை பிறரால் வாரா வமுதகஞ் சிரண்டினுக்கு, மோங்கிய சுவையின் பேத முதவினார் சிலருமுண்டோ" என்னும் ஆன்றோர் வாக்கின்படி இன்பதுன்பங்கள் அவரவர் முன்செய்த நல்வினை தீவினைகட் கீடாகவே வருதலானும் ஒருவன் தமக்குத் தீங்கு செய்யினும் பொறுத்தலே நன்றாம். இது பெரியோர் கடமை யென்பது "பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி" என்னுந் திருவாசகத் தாவினிதுணரப்படும்; தமக்குத் தீங்கு செய்தவனை யொறுத்தார்க்கு உண்டாவது அந்நா ளொன்றினும் கருதியது முடித்தேமெனத் தருக்கியிருக்கும் பொய்யின்பம். அதனைப் பொறுத் தார்க்கு உண்டாவது உலக மழியு மளவும் உள்ள புகழாம்.

பெரியோர் ஒருவன் தமக்குச் செய்த தீமையைப் பொறுத்தலே யன்றி, ஐயோ! இவன் இவ்வுலகில அற்பவாழ்க்கையைப் பொருட்படுத்தி எமக்குத் தீமை செய்ததனால் எரிவாய் நரகத்துக்காளாவானே யென்று பரிவும் அடைவார்கள். தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற், றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை, யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொலென்று, பரிவதூஉஞ் சான்றோர் கடன்" என்பது நாலடியார்.

இன்னும் பெரியோர் தமக்குத் தீங்குசெய்தோனுக்குப் பரிதலேயன்றி நான் தீங்கு செய்தும் எனக்கு உவகைகளைச் செய்யும் இவரது பொறுமையை யறியாமல் இவருக்குத் தீங்கு செய்தேனே யென்று அவன் தானே நாணும்படி உவகைகளையும் செய்வார்கள். இதுவே தமக்கு இம்மை மறுமைப் பயன் கெடாமல் தம்பாற்றீங்கு செய்தவனை யொறுக்கும் உயர்ந்த மார்க்கமாம். இவ்வுவகைகளையும்

அவன் முன்செய்த தீமையையும் மறவாவழி அவை யுள்ளத்து நிக்கப் பிற்காலத்திற் பொறுமை யென்பது நீங்கித் தீமை செய்ய நேரினும் நேருமாதலின் அவ்விரண்டையும் மறந்துவிடல் வேண்டும். இது "சிறியவரொரு பிழை செய்யின் மேலவர், பொறையொடு பின்னரும் போற்ற லல்லதை, யிறையதும் வெகுள்வரோ யானுஞ் செய்பிழை, யறிவனீ யன்றியே யார தாற்றுவார்" என்னுங் கந்தபுராணச் செய்யுளானும் 'இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண, நன்னயஞ் செய்து விடல்' என்னுந் திருக்குறளானும் நன்குணரப்படும். இவற்றுள் "பொறை யொடு பின்னரும் போற்றலல்லதை" என்பதும் "விடல்" என்பதற்கு ஆசிரியர் பரிமேலழகர் "மறவாவழிப் பின்னும் வந்து இளைக்கு மாகலின் மறத்தற் பாலவாயின" என எழுதுவதும் ஈண்டு முக்கியமாகக் கருதற் பாலவாம். ஒருவன் செய்த தீமையைப்பொறுத்தல் உயர்வு. அவனுக்குப் பரிதல் அதனினும் உயர்வு. அவனுக்கு உவகை செய்தல் அதனினும் உயர்வு. அவன்செய்த தீமையையும் தாம் செய்த உவகையையும் மறத்தல் அதனினும் உயர்வு.

இன்னா செய்தார்க்கு மினிய செய்தல் சால்புடைமைக்கு இன்றியமையாது வேண்டப்படுவ தொன்றாம். இது நோக்கியன்றோ "சான்றாண்மை" (பல குணங்களானு நிறைந்து அவற்றை யாட்டற்றன்மை) யென்னு மதிகாரத்தில் "இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்கா, லென்ன பயத்ததோ சால்பு" என்று கூறினர்? "என்ன பயத்தது" என்னும் வாக்கியத்தால் இதனது இன்றியமையாமை பெறப்படும். தாம் உபகாரஞ் செய்திருந்தும் அதனை யோராமல் தமக்கு அபகாரஞ் செய்வார்க்கும் உபகாரஞ் செய்தலன்றித் தீமைசெய்தல் உயர்குடிப் பிறந்தார்க் கில்லையாகும். இதனை "உபகாரஞ் செய்ததனை யோராதே தங்க, ணபகார மாற்றச் செயினு—முபகாரந், தாஞ் செய்வ தல்லாற் றவத்தினாற் றீங்கூக்கல், வான்றோய் குடிப்பிறந்தார்க் கில்" என்னும் வெண்பாவால் அறிக.

இத்தகைய பொறுமை யின்றிக் கோபமுடையார்க்கு அஃது அவரைப் புண்ணிய பாவங்களைப் பகுத்துணர விடாமல் பிறர்க்குக் கெடுதி செய்யும் வழிகளைச் சிந்திக்கச் செய்து சலனத்துக்குட் படுத்தித் தீப்பிறப்பு முதலிய வற்றைக் கொடுக்கும். இதனை "சினத்தினால் வருந் தீமையத் தீமைதீப் பிறப்பு, மனத்தி னீடிய மருட்கையும் வறுமையு நரகு, மனைத்து நல்கிடு மாதலா லொருபொழு தயர்த்துஞ்,

தனக்கு நல்லவன் வளர்ப்பனோ சீற்றமாங் சழலை" என்னுஞ் சேது புராணச் செய்யுளாலறிக. கோபம் அக்கினி யென்னுங் கொடிய பொருளிரண்டில் அக்கினி தன்னைச் சேர்ந்தாரையே கொல்லக் கோபம் தனக்கு இடமானவரையே யன்றி அவர்க்கினமாகிய வரையுஞ் சுடுதலின் அக்கினியினுங் கொடியது கோபமேயாம். இது பற்றியே "சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு, மேமப் புணையைச் சுடும்" எனவும் "மூங்கிலிற் பிறந்து முழங்குதீ மூங்கின் முதலற முருக்குமா போலத், தாங்கருஞ் சினத்தீத் தன்னுளே பிறந்து தன்னுறு கிளையெலாஞ் சயிக்கு, மாங்கதன் வெம்மை யறிந்தவர் கமைபா லதனையுள் ளடக்கவு மடங்கா, தோங்கிய காமத் தீயினை யொக்கு முட்பகை யுலகில்வே றுண்டோ" எனவும் கூறினார். குணமென்னுங் குன்றேறி நின்றார்க்கும் அநாதியாய் வருகின்ற வாறு பற்றி ஒரோவழித் தோன்றும் வெகுளியை உடனே மெய்யுணர்வு அழிக்கு மென்க. கோபமிக்கவரெல்லாம் ஞானமெய்துதற்குரிய உயிர் நின்ற தாயினும் கலக்கத்தான் அஃதெய்தாமை ஒருதலையாகலின் இறந்தவரோடொப்பர். சினத்தை விட்டவர் சாக்காடெய்துதற் குரிய யாக்கை நின்ற தாயினும் ஞானத்தான் வீடு பெறுதல் ஒருதலையாகலின் துறந்தவரோ டொப்பர்.

இத்துணை யிழிவு பொருந்திய கோபத்தைத் தன்னிற் றாழ்ந்தார் ஒத்தார் உயர்ந்தார் என்னு மூத்திறத்தாருள் ஒத்தார் மாட்டும் உயர்ந்தார் மாட்டும் அடக்கிக் கொள்ளின அது பொறையெனப் படாது. என்னை? அவ்விருதிறத்தார் மாட்டும் தன் கோபம் செல்லா தாகலி னென்க. மற்றென்னோ? பொறை யென்னின், தன்னிற் றாழ்ந்தவன் றீமை செய்துழிப் பொறுப்பதே பொறை யெனப்படு மென்க. இதனை "வலியவன் மாட்டுமொத்தான் மாட்டினும் வெகுளிகாத்தல், பொலிவுசெய் யறமதென்னப் பொருந்துறா தனையர் தம்பா, னலியுறு வெகுளி செல்லா தாதலி னலிய லாற்றா, மெலியவ னிடத்துக் காக்கும் வெகுளியே யறம தென்பர்" என்பதனையறிக.

பல குணங்களானும் நிறை வுடைமை தங்கணின்று நீங்காமை வேண்டு வார்க்குப் பொறையுடைமை போற்றி யொழுகப்படு மாதலின் குணங்களெல்லாவற்றுள்ளும் தலையாய குணம் பொறையுடைமையாம்.

சொ. வேலுச்சாமிக் கவிராயர்.

காக்கை ஓர் பறவை.

முன்னுரை.

காக்கையின் ஒருபொருட் பல்பெயர், வகை, நிறம், உணவு, கூடியுண்டல், குணம், மனம், சுபசகுனம், அபசகுனம், சயம், அபசயம், அயபற்புள் வளர்த்தல், பலி, நேயின்மை, வயது, துவசம், கண்மணி, கதை முதலியவைகளைப் பற்றிய ஒரு வியாசம் உதார ணச் செய்யுட்களோடு பத்திரிகை வாயிலான் வெளியிடலாமென்ற எண்ணம் எனக்குண்டாயதுபற்றி இந்த வியாசம் எழுதி வெளி யிடலானேன். இதிலுள்ள "குற்றங் களைந்து குறை பெய்து வாசி த்தல், கற்றறிந்த மாந்தர் கடன்"

வியாசம்.

காக்கையென்னும் ஒரு பொருளுக்குப் பல பெயர்கள் உள. அவையாவன: அரிட்டம், உரண்டம், உலூகாரி, கரடம், கரவாகம், கரும்பிள்ளை, காகம், காக்காய், காரி, கோரண்டம், கொடி, துரோ ணம், நரந்தம், நராந்தம், பரபிருதம், பலிபட்டம், புட்டம், வாயசம், முதலிய பிறவும் ஆம்.

இவற்றினுக்கு உதாரணம் (நிகண்டும், அகராதியும்)

காக்கைகளிற் சிறிதும் பெரிதும் என இருவகைப்படும். சிறி திற்கு மணிக்காக்கை யென்றும், பெரிதிற்கு அண்டங்காக்கை அல் லது காலோலம் என்றும் பெயர்.

மணிக்காக்கை யென்றதற்கு உதாரணம்.

" வில்லு வில்லுக் காக்கை வீரமணிக் காக்கை"

'மணிக் கயிறு' என்றாற் போலும். (இத்தேசச்சிறுவர் சொல்வதோர் பழமொழி.)

அண்டங்காக்கை, காலோலம் என்பதற்கு உதாரணம்.

(அகராதி.)

காக்கைகள் கறுப்புநிறம் உடையன. சிறு காக்கையின் கழுத் தைச் சுற்றிலும் சாம்பல் நிறம்போன்ற கொஞ்சம் மங்கலான வெண் மை நிறம் உண்டு.

அண்டங்காக்கையின் தேகம் முழுவதும் மிகக் கறுத்திருக் கும். இத் தேசத்திற் சிலர் வெண்ணிறக் காக்கையைக் கண்டோம் என்ப; அக்கூற்று ககனாரவிந்தம், முயற்கோடு என்பன போ லாம்.

காக்கைகள் கருமை நிறம் உடையன என்பதற்கு உதாரணம் 'கரும்பிள்ளை' 'காரி' என்ற பெயர்களே போதிய சான்றும்; அன்றியும் உதாரணச் செய்யுட்கள்.

"சுருக்கமில் என்ற செய்யுளில், "பனிமா லிமயப், பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும் பொன்னிறமா, யிருக்கும்." (யாப்பருங்கலக் காரிகை. பாயிரம், ௩) எனவும், "காக்கையிற் கரிது களம்பழம்" (நன்னூல், சூ,௨கூகூ; ஒப்புப் பொருளுக்குதாரணம்.) எனவும், "அத்தியின் மலரும் வெள்ளை ஆக்கைகொள் காக்கைதானும்,...........அளவிடப்பட்டாலும்...... ....தெரிந்தவரில்லை கண்டீர்." (விவேக சிந்தாமணி, சச.(எனவும், "ஏதிலார்" என்னும செய்யுளில், நேர் நின்று, காக்கை வெளிதென்பா ரென்சொலார்." (நீதி நெறி விளக்கம், ௩௩.) எனவும் வரும்.

சவம்பட்ட மனிதர்களின் உடல்களே காக்கைகளுக்குத் தக்க உணவாம்; இடுகாட்டிற் கிடக்கும் பிரேதங்களினிடத்தே மிக நேசம்; பிணங்களின் நிணங்களைக் களிப்புடன் உண்டு ஏனைய கழுகு, பருந்து முதலிய பறவைகளுடன் மயானத்திலிருக்கும் விளா மரங்களில் வசித்திருக்கும்; களேபரங்களின் கண்களைத் தம் கூரிய மூக்கினாற் கொத்தி யுண்பதில் அதிக ஆசை; யுத்த பூமியிற் பட்டுக்கிடக்கும் யானைகளின் உடலை, கழுகு முதலிய பறவைகளோடு கலந்துண்ணும்; போர்க்களங்களிற் சிதறுண்டு கிடக்கும் வெள்ளிய நிணங்களைப் போர்வையாகப் போர்த்திக்கொண்டு களித்துத் திரியும்; கடற் கழியில் உலரக்கிடக்கும் அல்லது அருகிய ஜலத்திற் செல்லும். சிறிய வெளிற்று மீன்களைத் தின்னும்; மருத நிலத்துக்குரிய குடிமக்கள் கொடுக்கும் உதிரம் கலந்த சிவந்த சோற்றுத் திரளையாகிய பலியை விழுங்கி, பின்பு நெய்தல் நிலத்துக்குடிகளின் மனையைச் சூழ்ந்த நொச்சியினது நிழலிடத்துக்கிடந்த யாமைகளின் பார்ப்பைப் பசித்தகாலத்துத் தின்பதாகப்பாதுகாத்து வைக்கும்; வேப்பங்கனிகளில் வெகு விருப்பம்; எருதுகளுக்கு நோவுண்டாகும்படி, அவைகளின்மேல் இருக்கும் புண்களைக் கொத்தி யுண்ணும்; தானியம் முதலான பிறவும் அவைகளுக்கு உணவாம்.

மனிதர் உடலுணவிற்கு உதாரணச் செய்யுட்கள்.

" காக்கை நரி செந்நாய் கழுகொருநாள் கூடியுண்டு,
தேக்குவிருந் தாமுடலைச் சீயென்ப தெந்நாளோ."

(தாயுமானவர், எங்குங) எனவும்,

" காக மோடுகழு கலகை நாய்நரிகள் சுற்று
சோறிடு துருத்தியை." (தாயு, சிற்சு, க) எனவும்,

" எட்பகவு மன்பில்லா ரிவ்வுடலிவ் வாறிருந்தாற்
பெட்புறுவர் பேதைமுதற் பேரிளம்பெண் ணீறாக
உட்புறம்பா வைத்தா லுகிர்ப்பருந்தும் வாயசமு
முட்கழுகுங் கல்யாணம் பண்ண முயன்றிடுமே."

இது சாரமாமுனிவர் கூற்று. வாயசம்-காக்கை. (செவ்வந்திப்புராணம், உறையூரழித்த சருக்கம், உச) எனவும் வரும்.

பிரேதத்திடத்து நேசம் என்றதற்குச் செய்யுள்.

" நற்றுமரை " என்றசெய்யுளில், " இடுகாட்டிற், காக்கை யுகக்கும் பிணம்." (வாக்குண்டாம், உச) எனவரும்.

பிணங்களி னிணங்களையுண்டு விளா மரங்களிலிருக்கும் என்றதற்குதாரணம்.

" வெண்ணிணந் தடியொடு மாந்தி மகிழ்சிறந்து,
புள்ளிறை கூரும் வெள்ளில் மன்றமும்."

புள்-காக்கை, கழுகு, பருந்து முதலியவை.

வெள்ளில் - விளாமரம். வே. சாமிநாதையர் அவர்கள் அரும்பதவுரை. (மணிமேகலை, சு, அச. அரு.) எனவரும்;

கமேளபரங்களின் கண்கள் உணவிற்குச் செய்யுள்.

" தாக்கிகல் " என்னும் செய்யுளில் " நோக்கிய கண்களை நுதிகொள் மூக்கினுற், காக்கைகள் கவர்ந்துகொண் டுண்ணக் காண்டியால்."

இது அநுமார் கூற்று. (கம்பராமாயணம், சுந்தரகாண்டம், சூளாமணிப்படலம், கூ0.) எனவரும்:

யுத்தபூமியில் யானையுடலை உண்ணும் என்றதற்குச் செய்யுள்.

" கரிகள் கருவிகளோடு சிந்தின, கழுகு நரியொடு
காக முண்டன " (கலிங்கத்துப்பரணி, போர்பாடியது, சச.) எனவரும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

போர்க்களத்தில் நிணப்போர்வை போர்த்துத்திரியும் என்ற தற்குச் செய்யுள்.

"நெருங்காக வச்செங் களத்மேத தயங்கும்
நிணப் போர்வை மூடிக்கொளக்,
கருங்காக வெண்காகம் மாகிநின் றவர்முன்பு
காணாத காண்மின்களோ." (கலிங், போர் பாடியது; கரு.)

எனவரும்;

செளிற்றுமீன் உணவிற்குதாரணம்.

"காக்கை, இருங்கழி யினக்கெடி றுருந் துறைவன்." கெடிறு-கெளிற்றுமீன். (ஐங்குறுநூறு, கசுசு, கசுஎ.) எனவரும்;

மருத நிலத்துக் காக்கை நெய்தல் நிலத்து யாமையின் பார்ப்பைத்தின்னும் என்றதற்கு உதாரணம்.

"மாமாவின் வயின்வயினெற்
றூழ்தாழைத் தண்டண்டலைக்
கூடுகெழீஇய குடிவயினாற்
செஞ்சோற்ற பலிமாந்திய
கருங்காக்கை கலவுமுனையின்
மனைநொச்சி நிழலாங்க
ணீற்றியாமை தன்பார்ப் போம்பவும்"

எனவே "மருதநிலத்திருக்கும் காக்கை நெய்த னிலத்துப் பார்ப்பைத்தின்னும்." என்றார் என்பது, நச்சினார்க்கினியர் விசேடவுரை. (பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, கஅ0 முதல், கஅஎ வரையில்) பார்ப்பென்றது, "தவழ்பவை தாமும் அவற்றோரன்ன" ஆகலின்) தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல்,ரு)எனவரும்

வேப்பங் கனியிற் பிரியம் என்றதற்குச் செய்யுள்.

"உண்டுகுணமிங்" என்ற செய்யுளில், "வேம்பன்றோ, காக்கை விரும்புங் கனி." (நன்னெறி, உச.) எனவரும்.

எருதுகளின் மேற்புண் ணுணவிற்குதாரணம்.

"எருது வருத்தம் காக்கை யறியுமா?" என்றதோர் பழமொழி. (இத்தேசவழக்கு.) எனவரும்.

(இன்னும் வரும்.)

I. M. முருகய்ய வாத்தியார்,

தலைமை,B. E. ஸ்கூல், செங்கிப்பட்டி, தஞ்சாவூர் தாலூகா.

கமலினி.

(32-ம் பக்கத் தொடர்ச்சி.)

சக்ரவர்த்தி:—இருக்கட்டும். அவள் தங்கள் பேரிற் கொண்டிருக்கிற காத லெவ்விதமானதென்று தங்களுக்குத் தெரியுமா? (வீரகேசரி மௌனம்) அள வற்றகாதல் கொண்டிருக்கிறாள். தங்களை மணஞ்செய்து கொள்ள முடியா விட்டால் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளத் தயாராயிருக்கிறாள். அப்படியே செய்வாள்.

வீரகேசரி:—ஐயோ பாவம்! அவளுக்கெப்படி இக்காதலேற்பட்டது?

சக்ரவர்த்தி:—காதலேற்படுவதற்குக் காரணமுண்டோ? அவளை சிரசாக் கினை செய்யப்போன காலத்திலு மடுத்தஜன்மத்திலாவது தங்களை மணஞ் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தனளாம். அப்படியானு லவளுடைய காதலெவ்வளவிருக்குமென்று யோசித்துக்கொள்ளுங்கள். அவ்வளவு காதல் கொண்டிருக்கிற பெண்ணை மணஞ்செய்யாமலிருப்பதே பெரும் பாவம். அத னாலவள் தன்னுயிரை மாய்த்துக்கொண்டாலது இன்னுங் கொடியபாவமாகும். மேலுந் தங்கள்தாயாரு மவ்விவாகத்தில் மிகுந்த திருப்தியாயிருக்கிறதாகவே தெரிகிறது. கமலினி எனக்குச்செய்த பேருதவிக்கு நானுமவள் கோரிய தைக் கொடுப்பதாய் வாக்களித்து விட்டேன். ஆகையா லிவைகளையெல்லா முத்தேசித்து கமலினியை விவாகஞ் செய்துகொள்வதே நலமெனத் தோன் றுகின்றது.

வீரகேசரி:—அவைகளையெல்லா முத்தேசித்து விவாகஞ் செய்துகொண் டால் என்வாழ்நாள் முழுவதுந் துன்ப மனுபவிக்கும்படி நேரிடுமே. அதற் கென்செய்வது?

சக்ரவர்த்தி:—கமலினியை விவாகஞ் செய்வதால் துன்பமொன்று மேற் படாது. அதைப்பற்றி யோசிக்கவேண்டாம். நான் சொல்வதைக் கேட்டு யோசித்துச் சொல்லுங்கள். கமலினியை விவாகஞ் செய்து கொள்ளாவிட் டால் அவள் தன்னுயிரை மாய்த்துக்கொள்வாள். அதனாலேற்படுகிற பாவத் திற்கும் உங்கள் தாயாரின் மனவருத்தத்திற்கும் சக்ரவர்த்தியின் கோபத்திற்கு மாளாகவேண்டியதா யிருக்கும். கமலினியை மணஞ்செய்து கொண்டால் அப்பெண்ணின் அளவற்ற காதலுக்கும் உங்கள் தாயாரின் மனதிருப்திக்கும் சக்ரவர்த்தியின் சந்தோஷத்தா லேற்படுகிற பாக்கியத்திற்கும் பாத்தியப்படு வீர்கள். இவ்விரண்டில் எது நன்மையென்று யோசித்துச் சொல்லுங்கள், இன்று சாயந்திரத்திற்குள் பதிலை யெதிர் பார்க்கிறேன் (சக்ரவர்த்தி போகி றார்கள்.)

*

வீரகேசரி:—தெய்வமே! என்னையென் ஒருராஜவம்சத்திற் பிறக்கும்படி செய்தும் இவ்வளவு துன்பத்திற்காளாக்கவேண்டும்? நானொரு ஏழையாயிருந் திருந்தால் என்னிஷ்டப்படி விவாகஞ் செய்துகொண்டு சுகமாயிருந்திருப் பேனே. ஒரு அரசனாயிருக்கிறபடியினாலல்லவா சக்ரவர்த்தியின் கோபத்திற் குள்ளாகவேண்டியதாயிருக்கிறது? அக்கோபத்தை யுத்தேசித்தல்லவோ என் தாயாருமிவ் விவாகத்திற்குடன்பட்டிருக்கிறார்கள். என்தாயின் மனவருத் தத்தை யெப்படிச்சகிப்பது? கமலினி என்றால் தன்னுயிரை மாய்த்துக்கொள் வாளே யென்றுவது அதனாலெனக்குப் பழி யேற்படுமென்றுவது எனக்குக் கவலையுமில்லை. சக்ரவர்த்திக்குக் கோபமுண்டாகி என்ராஜ்யம் போய்விடுமே யென்ற பயமுமில்லை. என்தாயின் மனவருத்தமொன்றே என்னை வருத்து கின்றது. அஃதொன்றை மாத்திரமுத்தேசித்து இவ்விவாகத்திற்குச்சம்மதிக்க வேண்டுமென்றேற்படுகிறது. ஆனால் கமலினியை விவாகஞ்செய்து கொண் டால் இச்சென்மத்திலெனக்கும் இல்லற சுகத்திற்கும் வெகு தூரமென்பதிற் சந்தேகமில்லை. விவாகத்திற்குப்பின் னெனக்குக் காதலுண்டாகு மென்றுந் தோன்றவில்லை. அதுமாத்திரமல்ல. என்மனதை இவ்வளவு புண்படுத்தி தான்கொண்ட எண்ணத்தையே நிறைவேற்றிக்கொண்ட கமலினியினிடத்தில் முன்னிருந்த சகோதரியென்ற நேசமும்போய் வெறுப்பு முண்டாகுமென்றே தோன்றுகிறது. கணவனுக்குத் தன் மனைவியின்பேரில் வெறுப்பு ஏற்பட்டு விட்டால் அவனுக்கு இல்வாழ்க்கையில் சுகமேது? அதுவே என் கதிபோலிருக் கின்றது. பின்னால் துன்பமுண்டாகுமென்று முன்னமே தெரிந்திருந்தும் அவ்விவாகத்திற்கு நானுடன்பட வேண்டியதா யிருக்கின்றதே. இது விதியின் வல்லமையல்லவா? என்தாயே உங்களுடைய மனவருத்தத்தைச் சகிக்கமுடி யாமல் நானிவ்விவாகத்திற்குச் சம்மதிக்கின்றேன். அதனாலென் வாழ்நாள் முழுதுந் துன்பமனுபவிக்கவுஞ் சம்மதிக்கின்றேன். அப்படி நான் துன்பமனு பவித்தபோதிலும் அதனாலுங்களுடைய மனந் திருப்தியடைகிறதா யிருக்கிற படியால் நான் உங்கள் சொற்படி கமலினியை மணஞ்செய்து கொள்கிறேன். ஆனால் மணந்தான்செய்து கொள்ளக்கூடும். அவளை நேசிக்கவுங்கூடுமோ? முடியாதே. ஆனால் தாங்களும் கமலினியை விவாகஞ் செய்துகொள்ளும்படி யாகத்தானே கேட்கின்றீர்கள். நானவளை நேசிக்கமுடியாதென் றுங்களுக்குத் தெரிந்திருந்தும் அவளை விவாகஞ் செய்துகொள்ளும்படி சொல்லுகிறீர்கள். உங்களுடைய மனத்திருப்திக்காக அப்படியே செய்கிறேன். இதுவே நிச்சயம். கமலினி! உன்னாலெனக் கிவ்வளவு துன்பமு மேற்படுகிறது. நீயுமென்னை உண்மையாக நேசிக்கிறதாயிருந்தால் என்னை இவ்வளவு துன்பத்திற்குட்படு த்தமாட்டாய். ஆகையால் நீஎன்னை நேசிக்கவில்லையென்றே தோன்றுகிறது. ஒருஅரசனது மனைவியாகவேண்டுமென்கிற பேராசையினாலிக்காரியஞ் செய் யத்தொடங்கினையென்றே நினைக்கின்றேன். சக்ரவர்த்தியையும் என்தாயை

யும் வசப்படுத்திக்கொண்டு உன்னெண்ணத்தை முடித்துக் கொண்டாயென்று கர்வங்கொள்ளாதே. அவர்கள் உன்னை நான்மணஞ் செய்துகொள்ளும்படி செய்யலாமேயொழிய உன்னைநான் நேசிக்கும்படி செய்ய அவர்களால் முடியா தென்பதை நன்றாயறிந்துகொள். அப்படியே நான் நேசியாவிட்டால் உன்னை மணஞ்செய்துகொள்வதா லெனக்குத் துன்பமேயெழிய சுகமில்லை. நான் என்னெண்ணத்தை நிறைவேற்ற முடியாமல் துன்பமடையப் போகின்றேன். உன்னெண்ணத்தை நிறைவேற்றிக்கொண்ட நீயாவது சுகமடையப் போகின் றனையா? இல்லை. உன்பேராசையான எண்ணம் நிறைவேறுமேயொழிய உனக்கு உண்மையான மனதிருப்தி யுண்டாகாது. நீ நெல்வேலி மன்னனு டைய மனைவியாகலாம். அவ்வளவேயல்லாமல் அம்மன்னனுடைய அன்பிற் குப் பாத்தியப்பட்ட காதலியாகமாட்டாய். ஆனால் நீ கேட்பதும் மணஞ்செய் துகொள்ளவேண்டுவ தொன்றுதானே? உன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள். பார்த்துக்கொள்வோம். (போகிறார்.)

களம் : 5

இடம் : ஷை அரண்மனையிலோரறை. காலம் : காலை.

(சக்ரவர்த்தி, சக்ரவர்த்தினி, மங்கையர்க்கரசி மூன்றுபேர்களும் வீற்றிரு க்கின்றார்கள்).

சக்ரவர்த்தி:—வீரகேசரி கடைசியாக எப்படிச் சம்மதித்தார்?

மங்கையர்க்கரசி:—இவ்விடத்து ஆக்ஞையைமீறி நடக்கமுடியுமா?

சக்ரவர்த்தி:—நானுமெவ்வளவோ சமாதானமாய்ச் சொன்னேன். அவர் கேட்கவில்லை. கடைசியாக அவரவ்விவாகத்திற் கிணங்காவிட்டா லென்னு டைய அதிருப்திச்காளாகவேண்டியதாயிருக்குமென்று சொன்னேன்.

சக்ரவர்த்தினி:—தாங்கள் சொல்லுவதைப் பார்த்தால் உங்களுடைய உத் தரவுக்குப் பயந்து அவர் சம்மதித்திருக்கிறார்போலவே தோன்றுகிறது. அப் படி யவரை வற்புறுத்திவிவாகத்தை நடத்திவைப்பதா லென்னபிரயோஜனம்?

சக்ரவர்த்தி:- அதைப்பற்றி கமலினி கவனித்துக்கொள்ள வேண்டியது. நானவளுக்கு வாக்களித்தபடி விவாகத்தை நடத்திவைக்கவேண்டும்.

சக்ரவர்த்தினி:-விவாகத்திற்குப் பின்னாலாவது வீரகேசரிக்கு அன்பு ஏற் படுமென்று தாங்களெண்ணுகிறீர்களா?

மங்கையர்க்கரசி:—அன்பு ஏற்படும்படி கமலினி நடந்துகொள்வாளென்ப தில் யாதொரு சந்தேகமுமில்லை.

சக்ரவர்த்தினி:—விவாகத்தை நடத்திவைப்பதானால் கூடிய சீக்கிரத்தில் முடித்துவைப்பதே நலம். ஒருவேளை வீரகேசரி பின்வாங்கினாலென்ன செய் கிறது?

சக்ரவர்த்தி:—நானுமதையுத்தேசித்தே கூடிய சீக்கிரத்தில் விவாகத்தை நடத்தவேண்டுமென்றெண்ணுகிறேன். இவ்விடத்தில் நடத்துவதில் தங்களுக்கு ஆக்ஷேபணை யில்லையே?

மங்கையர்க்கரசி:—எனக்கென்ன ஆக்ஷேபணையிருக்கிறது?

சக்ரவர்த்தி:—அப்படியானால் அதுவிஷயமாய் செய்யவேண்டிய ஏற்பாடுகளை இப்பொழுதே செய்யும்படி மந்திரிக்கு உத்தரவு செய்கிறேன். நான் கமலினிக்கு அளித்தவாக்கை நிறைவேற்றும்படி வீரகேசரி சம்மதித்ததே பெரிய காரியம். (எல்லோரும் போகின்றார்கள்.)

களம் : 6.

இடம் : ஷெ அரண்மனை. காலம் : காலை.

(மங்கையர்க்கரசி, வீரகேசரி, கமலினி, கோமதி, நான்குபேர்களும் நெல்வேலிக்குப் புறப்படுகிறார்கள்).

சக்ரவர்த்தி:—(மங்கையர்க்கரசியை நோக்கி) நம்முடைய எண்ணப்படி இதுவரை எல்லாம் க்ஷேமமாகவே முடிந்தது. இனிமேலுமிவ் விவாகத்தாலொருகெடுதியுமேற்படாமலும் கமலினிக்கொரு குறை வுண்டாகாமலும் பார்த்துக்கொள்ள வேண்டியது தங்களுடைய கடமை. கமலினிக் கெவ்விதத்திலாவது குறைவு ஏற்பட்டால் அக்குறைவு நம்மிருவருக்கு மேற்பட்டதேயாம். நானோ இங்கிருக்கிறேன். தாங்களவளுடனேயே யிருப்பதா லவளுக்கொரு குறைவு முண்டாகாமல் பாதுகாக்கவேண்டியது தங்களைச்சேர்ந்த கடமையே.

மங்கையர்க்கரசி:—என்னாலியன்றளவு கமலினிக்கொரு குறைவு மேற்படாமல் பார்த்துக்கொள்கிறேன்.

சக்ரவர்த்தி:—(வீரகேசரியை நோக்கி) வீரகேசரி! உங்களுக்கிவ்விவாகத்தில் முற்றிலுஞ் சம்மதமில்லாமலிருந்தபோதிலும் நானும் தங்கள் தாயாருஞ் சொன்ன வார்த்தைக்காக சம்மதித்து கமலினியை விவாகஞ் செய்துகொண்டதைப்பற்றி மிக்க சந்தோஷமடைந்தேன். ஆனாலிச்சமயத்தில் எங்களைத் திருப்தி செய்ததுபோ லினிமேலுமெங்களுக்கு அதிருப்தியுண்டாகாமல் நடந்துகொள்ளவேண்டும். கமலினி உங்களெண்ணத்திற்கு விரோதமாக நடந்தாளென்று நினைத்து அவள் பேரில் வெறுப்புக்கொள்ளாமல் அவளையுமன்போடு நடத்திவரும்படி கேட்டுக் கொள்கிறேன். அவளுடைய குணங்களைப்பற்றி நானொன்றுஞ் சொல்லவேண்டியதில்லை. தங்களுக்கே நன்றாகத் தெரியும் ஆனாலவள்கொண்ட அளவற்ற காதலே அவளுக்கேற்பட்ட குற்றம். அதையொருகுற்றமாக எண்ணாமல் அவளையன்போடு ஆதரிக்கவேண்டும். அவளுக்கொருகுறை வேற்பட்டா லக்குறைவு எனக்கேற்பட்டதென்றே நான் நினைப்பேன். நான் விவாக காலத்திற் சொல்லியபடி இனிமேல் நெல்வேலிராஜ்யத்

திற்குச் செலுத்தவேண்டிய கப்பமினி நீங்களனுப்பவேண்டுவதில்லை. கமலினிக்குக் கொடுக்கப்பட்ட சீதனமது.

வீரகேசரி:—நானவளை யொருவிதத்திலுங் குறைவாகநடத்தமாட்டேன்.

சக்ரவர்த்தி:—(கமலினியை நோக்கி) கமலினி! உன்னை நாங்கள் திருப்தி செய்துவிட்டோம். இனிமேலெங்களைத் திருப்திசெய்யவேண்டிய துன்னுடைய கடமை. வீரகேசரிக்குக்கொஞ்சமும் சம்மதமில்லாமலிருந்தும் நாங்கள் உனக்காக அவரைச் சம்மதிக்கும்படி செய்தோம். அவருடைய மனதை இனிமேல் சமாதானஞ்செய்யவேண்டிய துன்னுடையகடமை. எவ்விதத்திலு மவருடையமனம் அதிருப்தியடையாமல் நடந்துகொள்ள வேண்டும். கணவனன்பைக் கவருமுபாயங்கள் உனக்குத்தெரியுமென்று சொன்னாயல்லவா? அவ்வுபாயங்களால் அவருடைய அன்பைச் சம்பாதித்துக்கொள். அவருடைய அன்பை உன்னால் சம்பாதித்துக்கொள்ள முடியுமென்று நீ தைரியமாய்ச்சொன்னபடியினாலேயே நான் உன்னுடைய விவாகத்திற்குடன் பட்டேன். இனிமேல் உன்னுடைய நடத்தையினாலவருடைய அன்பை உன்னால் சம்பாதிக்க முடியாமலதனாலுனக்கொரு குறைவு ஏற்பட்டால் அது உன்னுடைய குற்றமேயல்லாமல் எங்களுடைய குற்றமாகாது. வீரகேசரிகுற்றமுமாகாது. ஏனெனில்,வீரகேசரி முன்னமே, தனக்கு இனிமேல் காதலுண்டாகாதென்று சொல்லிவிட்டார். ஆகையால் உன்னுடைய புத்தியினாலும் சாமர்த்தியத்தினாலு மவருக்குத் திருப்தியுண்டாகும்படி நடந்து கொள்ள வேண்டும். அதனாலுனக்கு சந்தோஷமுங்கீர்த்தியு மேற்படும். வீரகேசரிக்கு மில்லறசுகமேற்படும். உன் விவாகத்தை நடத்திவைத்த எங்களுக்கும் கௌரவமேற்படும். நீயப்படி நடக்காவிட்டால் நம்மெல்லோருக்குங் கவலையுந் துன்பமுமே யுண்டாகும். ஆகையால் சரியானபடி நடந்து எல்லோருக்கும் நன்மையை யுண்டாக்குவதுமன்றி ஒரு பெண் தன்னுடைய நடத்தையினால் எப்படிப்பட்ட புருஷனுடைய அன்பையுஞ் சம்பாதித்துக் கொள்ளலாமென்று உலகத்தவர்களுக்குத் தெரியும் படியுஞ் செய்ய வேண்டும்.

கமலினி:—என்னாண்டவன் கிருபையாலும் தங்களுடைய ஆசீர்வாதத்தாலு மப்படியே செய்கின்றேன்.

சக்ரவர்த்தி:—சரி. எல்லோரும் க்ஷேமமாய் போய்வாருங்கள். கூடியசீக்கிரத்தில் பார்க்கலாமென்றெண்ணுகிறேன்.

சக்ரவர்த்தினி:—எல்லோரும் போய் வாருங்கள். கமலினி, உன்னுடைய புத்தியையும் சாமர்த்தியத்தையும் இவ்விஷயத்தில் தான்பார்க்கவேண்டும்.போய் வாருங்கள் (எல்லோரும் சக்ரவர்த்தியையும் சக்ரவர்த்தினியையும் நமஸ்கரித்து விடைபெற்று செல்லுகின்றனர்.)

சக்ரவர்த்தி:-இவ்விவாகத்தாலேதாவது கெடுதி ஏற்பட்டால் அதற்குநானே காரணமாவேன். அப்பெண்ணின் பழியுமென்னைச்சாரும். நன்மையையே கருதி இக்காரியத்தைச் செய்தவெனக்கு அப்படியொருபழியும் பாவமுமேற்ப டாமல் என்னாண்டவனருளல் வேண்டும்.

அங்கம் iii. முற்றிற்று.

(இன்னும் வரும்.)

டி. யம். சங்கரலிங்கம் பிள்ளை.

ஒரு சந்தேக நிவிர்த்தி.

நமது வித்தியாபாநுவில் "நாட்டுக்கோட்டையார் தருமமும் சுவாமி வேதாசலமும்" என வரைந்த விஷயத்தில் ஸ்ரீமத் ஆறுமுக நாவலரவர்கள் முதலிய வித்துவான்கட்கு நாட்டுக்கோட்டையார் பொருளுதவியிருப்பதை குறிப்பித்தமையும், அதன்பின் வைசிய மித்திரனில் ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் நாட்டுக்கோட்டையாரிடம் எப்போது பொருளுதவி பெற்றார்கள்? என நண்பர் ஒருவர் வினவி யதையும் நேயர்கள் அறிவார்கள்.

ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் சிதம்பரத்தில் வித்தியாசாலை ஏற் படுத்திப் பலரிடம் திரவியசகாயம் பெற்று நடத்தும்பொழுது வங் காளம் முரு. லெ. கடை ஸ்ரீமத் காடப்பசெட்டியாரவர்கள் ரூபா எழுபத்தஞ்சு கொடுத்திருக்கிறார்களென்பதையும், நாகை வெளிப் பாளையத்திலிருந்த நாட்டுக்கோட்டையார்கள் ரூபாஐந்நூற்றிருபத் தெட்டு உதவினார்களென்பதையும் ஷை வித்தியாசாலையின் 1, 2, 3 ஆவேதனப்புத்தகத்திற் கண்டுகொள்ளலாம். நாட்டுக்கோட்டையார் களில் இன்னும் சிலர் அக்காலத்துதவினார்களென்பதைக் கேட்டிருக் கின்றோம். ஆனால் உதவிபவர்கள் பெயரும் தொகையும் இப்பொ ழுது தெரிவித்தலியலாது. இவ்வித்தியாசாலையின் ஆவேதனப்புத்த கத்தைப் பார்த்து நம் நண்பர் ஐயத்தை நீக்கிக்கொள்ளவேண்டுகின் றோம்.

இங்ஙனம்,

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

திண்டுக்கல் தமிழ் வித்தியாசங்கத்தின்
முதல்வருஷபூர்த்திக் கொண்டாட்டம்.

நிகழும் 1914௵ ஜூன்௴ 20, 21உ இருதினங்களிலும் திண்டுக்கல் முனிஸிபல் ஐஸ்கூல் ஹாலில் பெருஞ்சபை கூடியது. இவ்விருதினங்களிலும் ஸ்ரீமாந். ஜே. எம். நல்லசாமி பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல், அக்கிராசனம் வகித்தார்கள். ஷை சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதி ஸ்ரீமத் எல். ஏ. வெங்குசாமியய்யரவர்கள் (வக்கீல்), உபாக்கிராசனாதிபதி ஸ்ரீமத் சி. பொன்னுசாமிநாயுடுகாரு பி. ஏ. (தாலூகா போர்டு வைஸ் பிரசிடெண்டும் வக்கீலும்), பொக்கிஷதார் ஸ்ரீமத் ராம. ச. வள்ளிநாயகம் பிள்ளையவர்கள், கணிதபரிசோதகர் ஸ்ரீமத் ஆ. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், வரவேற்புச் சங்கத்தலைவர்களாகிய ஸ்ரீமத் கே குப்புசாமிஐய்யரவர்கள் பி. ஏ. பி. எல். முனிசிபல் சேர்மேன், ஸ்ரீமத் இ தெய்வபக்திக் கவுண்டரவர்கள் நிர்வாகத் தலைவர்களாகிய ஸ்ரீமத் சிவப்பிரகாசம்பிள்ளையவர்கள், ஸ்ரீமத் மு. சா. சங்கரலிங்கம் பிள்ளையவர்கள் இவர்களும் மற்றுமுள்ள நிருவாகசபையார்களும் ஏனைய உத்தியோகஸ்தர்கள் வர்த்தகர்கள் முதலிய கனவான்களும் மாணாக்கர்களும் 20உ மாலை 4 மணிக்கு வந்து கூடியிருந்தார்கள்.

மதுரை திருஞானசம்பந்தசுவாமிகளாதீனம் ஸ்ரீமத் சிதம்பர ஓதுவாரவர்கள் இன்னிசைக்கருவியுடன் கடவுள் வாழ்த்துப்பாடினார்கள். சபையோர்க்குப்பொதுவாக நல்வரவுகூறப்பெற்றபின் அக்கிராசனாதிபதியவர்கட்குவந்தனோபசாரங் கூறினதும் சபையின் முதல் வருஷ அறிக்கை படிக்கப்பட்டது தலைவரவர்கள் சபையின்நன்மையைப்பற்றியும் தமிழபிவிர்த்தியைப்பற்றியும்பொதுவாக முகவுரை கூறினார்கள். பின்னர் மதுரை ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் 'இல்லறதர்மம்' என்பதைப்பற்றியும் தூத்துக்குடி திருவாவடுதுறை ஆதீனசைவப்பிரசாரகர் ஸ்ரீமத் பொ. முத்தையபிள்ளையவர்கள் "ஆலயதத்துவார்த்தம்' என்பதைப்பற்றியும் சபையோர்கள் மிகமகிழ்ந்து ஏற்குமாறு உபந்யசித்தார்கள். தலைவரவர்கள் ஏற்றவாறு முடிவுரை கூறி மகிழ்வித்தார்கள். கடவுள் வாழ்த்துடன் இனிது நிறைவேறியது.

21—6—14 மாலையில் மறுபடி சபை கூடியது. சோழவந்தான் ஸ்ரீமத் அ. சண்முகம் பிள்ளையவர்கள் "நக்கீரரும் தமிழும்" என்பதைப்பற்றியும் ஸ்ரீமத் பொ. முத்தையபிள்ளையவர்கள் "அன்பு" என்பதைப்பற்றியும் மதுரை ஸ்ரீமத் கல்யாணசுந்தரபட்டரவர்கள் "ஈசுவர சிருஷ்டி" என்பதைப் பற்றியும் நன்றாக உடங்யசித்தார்கள். தலைவரவர்கள் ஏற்றவாறு முடிவுரை கூறினார்கள். கடவுள் வாழ்த்துடன் மங்கலமாகநிறைவேறியது. இச்சங்கம் என்றும்நின்று நிலவும்வண்ணம் இறைவனருள்க.

திண்டுக்கல்வாசி.

சமாசாரக்கொத்து.

முதல் முதல் விசிறி செய்தவள்:—சீனதேசத்திலுள்ள ஒரு சீனப்பிரபுவின் புத்திரியே முதல் முதலில் விசிறிசெய்யுமுறையை கண்டுபிடித்துச் செய்தாளாம். சீனதேசத்தாரிடத்து ஸ்பெயின் தேசத்தார் விசிறிசெய்யக் கற்றுக்கொண்டனராம். பிறகு மற்றவர்கள் அவர்களிடத்திலிருந்து விசிறிசெய்யக் கற்றுக்கொண்டனராம்.

* * *

அந்தரத்தில் ஓடும் ரயில்வண்டி:—பூமியில் எவ்வித ஆதரவுமின்றி ஆகாயத்திற்செல்லக்கூடிய ரயில்வண்டி ஒன்றை பாக்செலெட் என்னும் பிரெஞ்சுக்காரர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். மின்சாரத்தின் உதவியாற் செல்லும் இந்த ரயில்வண்டியின் பாகங்கள் முழுமையும் அலுமினியம் என்னும் உலோகத்தால் செய்யப்படவேண்டுமாம். இதற்கு உண்டாகும் செலவுகள் ரயில்வேக்களுக்கு ஏற்படும் செலவுகளைவிட மூன்றிலொருபங்கு குறைவாகவே ஏற்படுமென்று தெரியவருகிறது. இந்த வண்டி மணி யொன்றுக்கு 300 மைல் ஓடுமாம். இந்த வண்டிகளில் முதலில்தபால்மட்டும் கொண்டுபோகலாமென்று கருதப்படுகிறது. இதனைக் கண்டுபிடித்தவர் இதற்காகத் தம் வாழ்நாள் முழுமையும் செலவிட்டிருக்கிறாரென்றும் தெரியவருகிறது. இவ்வண்டிகள் உபயோகத்துக்கு வருமாயின் 440 மைல் தூரமுள்ள திருநெல்வேலியிலிருந்து ஒன்றரை மணி நேரத்தில் ஒருவன் சென்னைக்கு வந்துவிடலாம். இங்கிலாந்திலிருந்து சென்னைக்கு ஒருவன் சுமார் பத்து மணி நேரத்துள் வந்துசேரலாம்.

* * *

புகைமரம்:—ஜப்பானில் ஓனோவென்னுமிடத்தில் புகைமரமொன்றிருக்கிறது. அது சூரியன் அஸ்தமித்ததும் அது புகைய ஆரம்பித்துவிடுகிறது.

* * *

ஐக்கியமாகாணத்தில் மசூரி என்னும் பட்டணத்தில் ஒரு இந்திய ஸ்திரீயை முனிசிபல் கமிஷனராக நியமித்திருக்கிறார்கள்.

* * *

ஸ்ரீ சுப்பிரமணிய பஜனை:—பஜனை நாமாவளிகளும், 35 திவ்விய க்ஷேத்திரங்களின் திருப்புகழும் அடங்கியுள்ளது. இப்புஸ்தகம் வேண்டுவோர் எ. எஸ். விசுவநாதையர் கிர். 7 தணிகாசலப்பிள்ளைதெரு திருவல்லிக்கேணி மதராஸ் என்ற விலாசத்திற்கு 1 அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

அகமேபுறம்.

இது ஸ்ரீமாந் வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் கோயமுத்தூர்ச் சிறைவீட்டிலிருந்து இயற்றிய இரண்டாவது தமிழ் நூல்.

இது லௌகிக உந்நத நிலையையும் வைதிக உந்நத பதவியையும் சுலபமாக அடையச்செய்யும் மார்க்கங்களை வரிசைப்படுத்தித் தெளிவாகக்கூறுகின்றது. இதனைக்கற்றுணர்ந்து இதிற்கூறியுள்ள மார்க்கங்களில் ஒழுகுபவர் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் ஒருங்கே இம்மையில் அடைவரென்பது திண்ணம்.

இது டபிள்கிரௌன் 16பக்கங்களடங்கிய பாரம் ஐந்துகொண்டும் அழகிய துணியால் (காலிக்கோ பயிண்டு) கட்டப்பட்டும் இருக்கிறது.

இதுவரை தமிழில் வெளிவந்த வசனநூல்களுள் இதுபோல மனிதசமூகத்திற்கு இம்மை மறுமைப் பயன்களை அளிக்கவல்ல நூல் வேறொன்றுமில்லை யென்பது அறிஞர் பலருடைய அபிப்பிராயம். இது தமிழ்மக்கள் ஒவ்வொருவரிடத்தும் இருக்கவேண்டுவது அவசியம்.

இதன் விலை அணா எட்டு. வி. பி. சார்ஜ் அணா இரண்டு.

இப்புத்தகத்தை நாம் படித்துப்பார்த்ததில். மேலே கூறப்பட்ட விஷயங்கள் யாவும் உண்மையே யெனக்கண்டு பெருமகிழ்ச்சி கூர்ந்தேம். தமிழ்வாசிக்கத்தெரிந்த ஒவ்வொருவரும் இதனை வாங்கிப் படிப்பது நலமென்பது எமது அபிப்பிராயம்.

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசங்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

விலாசம்:

(1) மானேஜர், "விவேகபாநுப்பிரஸ்" மதுரை.

(2) வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள்,
மைலாப்பூர், சென்னை.

விற்பனைக்குத்தயாராயிருக்கும் தமிழ்ப்புத்தகங்கள்.

	ரூ அ பை
தனிச்செய்யுட்சிந்தாமணி 182 வித்துவான்கள் பாடிய 3815 பாடல்கள் கலிக்கோ பயிண்டு	3—0—0
கம்பராமாயணம் ஆரண்ய காண்டம் மூலமும் உரையும்	3—8—0
பழநி மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்கள் பிரபந்தத்திரட்டு ...	2—0—0
சிவஞானபாஷ்யம் ...	1—4—0
திருக்குறள் பரிமேலழகருரையுடன் (பாக்கட் சைஸ்) ...	1—0—0
கண்ணவிளக்கம் (ஜோதிஷம்) மூலமும் உரையும் ...	1—0—0
திருக்குறள் வசனம் ...	1—4—0
விஜயசுந்தரம் தமிழ் நாவல் (இரண்டு பாகமும் 20 படங்களுடன்)	1—8—0
ஞானாம்பிகை (இரண்டு பாகம் ஒரே பயிண்டு) ...	1—4—0
ஞானசம்பந்தன் ஷை ...	1—0—0
மதனகாந்தி (படிப்பதற்கு இன்பமான புதிய தமிழ்நாவல்) ...	1—0—0
சோமதி கோகிலமானது (ஓர் அற்புதத் தமிழ்நாவல்) ...	0-10—0
மாண்டவன் மீண்டமாயம் (ஓர் துப்பறியும் தமிழ் நாவல்) ...	0-8—0
கல்யாணி அல்லது வாழ்வில் தோன்றிய விபத்து (புதிய தமிழ்நாவல்)	0-10—0
தியாகராஜன் (இனிய தமிழ் நாவல்)	0—8—0
பொற்கொடி (குருமலைசுந்தரம்பிள்ளை இயற்றிய இனியதமிழ்நாவல்)	0—13-0
சித்ரரேகை அல்லது அசோகவன அற்புதம் ஷை	0-12—0
மனோரமா அல்லது ஆநந்தகுடீர அதிசயங்கள் ஷை	0—8—0
தேவீசந்திரப்ரபா (விசித்திரமான தமிழ் நாவல்) ...	0-10—0
கண்ணகி (ஓர் அற்புதத் தமிழ் நாடகம்) ...	0-12—0
திருக்குற்றாலத் தலபுராணம் (வசனம்) ...	0-12-0
குலோத்துங்க சோழன்கோவை ...	0—12-0
மகிபாலன்பட்டி மு. சின்னையாசெட்டியாரின் வியாசங்களும் உபந்நியாசங்களும்.	0-12—0
ஸ்ரீவான்மீகி இராமயணசருக்கார்த்த சங்கிரகம் (அரியக்குடி சா.கி. ரெங்கநாதன் செட்டியார் அவர்கள் இயற்றியது. செய்யுள்)	0—8—0
சைவசித்தாந்த விளக்கம் ...	0—12-0
தசகாரியவிளக்கம் ...	0—8—0
குமண சரித்திரம் (இரண்டாம் பதிப்பு விசேடக்குறிப்புகளுடன்)	0—8—0
சித்தாந்த ஞானரத்நாவளி ...	0—6—0
இன்னிசை இருநூறு (சோழவந்தான் அ. சண்முகம் பிள்ளை அவர்கள் இயற்றியது)	0—3—0
சேக்கிழார் பிள்ளைத்தமிழ் (மஹா வித்துவான் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியது	0—2—0
அபிதான சிந்தாமணி (தமிழ்ச்சங்கப்பதிப்பு) ...	7—0—0
தமிழ்ச் சொல்லகராதி உயிரெழுத்து முடிய உதாரணங்களுடன் ஷை ...	6—0—0
இரண்டாம் பாகம் ஷை ...	4—8—0
வில்லிபாரதம் ஷை ...	3—0—0
பன்னூற்றிரட்டு ஷை ...	2—0—0
சைவமஞ்சரி ஷை ...	1—8—0
ஞானமிர்தம் ஷை ...	1—0—0
தோத்திரத்திரட்டு ஷை ...	0—2—0

[இவைகளுக்கு V. P. தபாற்கூலி வேறு.]

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்,
வித்தியாபாநு ஆபீஸ், விவேகபாநுப் பிரஸ், மதுரை.

ஆறும் அதிகாரம்.

ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்.

“கழித்திலேன் காமவெந்நோய் காதன்மை என்னும் பாசம்
ஒழித்திலேன் ஊன்கணோக்கி யுணர்வெனு மிமை திறந்து
விழித்திலேன் வெளிறுதோன்ற வினையெனுஞ் சாக்குக்கொண்டேன்
அழித்திலேன் அயர்த்துப் போனே னதிகைவீரட்ட னாரே. தேவாரம்.

காந்திமதியும் நானும் இவ்விதமாகத் தோப்பிற்குச் செல்வதும், மீண்டும் வீட்டுக்குத் திரும்புவதுமாகச் சில தினங்கள் கழிந்தன. ஆனால் இதுவரை யில் என்னுடைய விருப்பத்தை வெளிப்படையாக நான் அவளிடம் தெரிவிக்க வில்லை. ஒரு நாள் அவள் மிகுந்த உற்சாகத்தோடு என்னிடம் வார்த்தையா டிக்கொண்டிருந்தபோது, சமயமறிந்து, வாழைக்கனியில் ஊசி நுழைப்பது போல், என் விருப்பத்தைக் குறிப்பாக அவளிடம் தெரிவிக்கத் துணிந்தேன்.

“அன்பே! நான் உன்னிடம் ஒரு விஷயம் தெரிவித்துக் கொள்ளவேண்டுமென்று விரும்புகிறேன்” என்று நான் காந்திமதியை நோக்கிக் கூறினேன்.

“அவ்விஷயம் யாது? அதை என்னிடம் தெரிவிப்பதற்குத் தயங்குவானேன்?” என்று காந்திமதி சொன்னாள்.

“தெரிவித்தால் என்மீது கோபங் கொள்வாயோ என்று அஞ்சுகிறேன்” என நான் பதில் பகர்ந்தேன்.

“இல்லை, நான் கோபிக்கவில்லை, சொல்லுங்கள்!” என்று காந்திமதி கூறினாள்.

“கண்மணி,—அன்பே—நான்—நான்—உன்னைக்—கா—காதலிக்கின்றேன்” என்று நான் தயங்கித் தயங்கி மெதுவாகக் கூறினேன். இவ்விதம் நான் கூறியபோது, என் உடம்பு சிலிர்த்தது. நெஞ்சம் துடித்தது! வாய் குழறிற்று! கண் சுழன்றது! மெய் வியர்த்தது! காந்திமதி எதும் பதில் சொல்லாமல் ஸ்தம்பித்து நின்றாள். அவளுடைய முகம் வெளுத்தது. ஒருவிதமான நாணக் குறிப்பும் அனுதாப நோக்கமும் அவளுடைய கண்களில் தோன்றின. சிறிது நேரம் பூமியை நோக்கியபடியே நின்றாள். பிறகு என்னைக் கடைக்கண்ணால் நோக்குவதும், ஆழ்ந்து சிந்திப்பவளைப் போல் ஆகாயத்தைப் பார்ப்பதுமாக அவளிருந்தாள். பதில் கூறுவதற்கு அவள் முயன்ற போதிலும், வார்த்தைகள் அவளுடைய வாயிலிருந்து வெளிப்படவில்லை. சுமார் கால்மணி நேரம் இவ்விதமிருந்தாள்.

“நண்பரே! நீரா என்னைக் காதலிக்கின்றீர்? நீர் சொன்னது எனக்கு விளங்கவில்லையே? காதல் என்றால் என்ன? என்று காந்திமதி என்னை வினவினாள்.

"அன்பே! காதல் என்பது ஒரு புருஷன் ஒரே ஸ்திரீயினிடத்தில் எக்காலமும் ஒரே தன்மையாகப் பாராட்டும் உண்மையான உள்ளன்பாகும். இவ்விதமே ஒரு ஸ்திரீ ஒரே புருஷனிடத்தில் பாராட்டும் உண்மை அன்புரிமையும் காதல் என்றே பெயர் பெறும்" என்று நான் விடை பகர்ந்தேன்.

"இந்தக் காதல் முதல் முதல் எவ்விதம் உண்டாகிறது?" என்று காந்திமதி வினவினள்.

"அழகிய சரீர உறுப்புக்கள் அமையப் பெற்ற ஒரு பருவவதியை முதன் முதல் ஒரு வாலிபன் கண்ணுறும் போதும், அவ்விதமே அழகிலும் ஆண்மையிலும் சிறந்த ஒரு வாலிபனை ஒரு யுவதி கண்ணுறும்போதும், ஒரு வகையான அன்புரிமை அவர்களுக்குள் ஏற்படுவதால், அழகே காதலுக்கு முக்கிய காரணம் என்று தெரிகிறது. ஆனால் குணம், தொழில், இயல்பு, கல்வி முதலியவைகளும் ஸ்திரீ புருஷர்களுக்குள் காதலைத் தோற்றுவிக்கும் இயல்புடையவாயிருக்கின்றன. இருந்த போதிலும், தோற்றமாத்திரையினால் காதலை உண்டாக்குவது அழகேயாதலால், அதனை முக்கிய காரணம் என்று நாம் கருதவேண்டியிருக்கிறது" என்று நான் விடை இறுத்தேன்.

"நண்பரே! 'அழகு' என்பது யாது? அது எவ்விதம் உண்டாகிறது?" என்று காந்திமதி உசாவினள்.

"சரீரத்தின் வெளித்தோற்றம் பார்ப்பதற்கு இனிமையாகவும், சரீரத்தின் அவயவங்கள் பூரணமான முதிர்ச்சியையும் வளர்ச்சியையும் பெற்று காண்பதற்கு வசீகரமாகவும் இருப்பது தான், 'அழகு' என்று சொல்லப்படும். சரீரத்திலுள்ள உட்கருவிகள் தத்தம் வேலைகளைச் சரியாய்ச் செய்வதனாலும், அதனால் சரீரம் நோய்வசப்படாமல் நல்ல நிலைமையில் நிலை பெறுவதினாலும் 'அழகு' உண்டாகிறது" என்று நான் பதிலளித்தேன்.

"சரீரத்தில் அமைந்துள்ள உட்கருவிகள் தத்தம் வேலைகளைச் சரியாய்ச் செய்கின்றனவா என்பதையும், அவ்விதம் செய்யாதபோது நாம் செய்யவேண்டுவது யாதென்பதையும், நோய் வசப்படாமல் சரீரத்தை நல்ல நிலையில் எவ்விதம் வைத்துக்கொள்வதென்பதையும் நாம் அறிந்து கொள்வது யாங்ஙனம்?" என்று காந்திமதி வினவினள்.

"அன்பே! 'தேக தத்துவம்' 'சரீரக் கூறுபாடு' இவைகளைப் பற்றிக்கூறும் நூல்களைப் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டும்" என்று நான் மறுமொழி பகர்ந்தேன்.

"அத்தகைய நூல்களை நான் படித்ததில்லை; இனிப் படித்தறிந்து கொள்ளவும் எனக்குச் சக்தியில்லை. உம்மாற் கூடுமானால், சுருக்கமாகச் சொல்லும். நான் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறேன்" என்று காந்திமதி கூறினள்.

"கண்மணி! அவ்விதமே சொல்லுகிறேன்; கேட்பாயாக! * ஒரு பெரிய மாளிகையானது கல், மண், சுண்ணும்பு, சேறு, மரம், இரும்பு முதலிய பொருள்களின் உதவியினுலும், அவற்றுட் சிலவற்றின் சேர்க்கையினுலும் கட்டப்படுதல் போல, சரீரமானது எலும்பு, தோல், நரம்பு, இரத்தம், சுக்கிலம், சதை, மூளை என்னும் எழுதாதுக்களின் சேர்க்கையால் அமைக்கப்பட்டிருக்கிறது. வெண்மையாயும் கடினமாயும் உறுதியாயும் மற்றத் தாதுக்களைக் காட்டிலும் பெரிதாயும் இருக்கின்ற வஸ்துவே, எலும்பு என்று சொல்லப்படும். மாளிகை நீடித்த நாள் நிலை பெறுவதற்கு அவசியமான சுவர்களும் அஸ்திவாரங்களும் தூண்களும் சுண்ணும்பினுலும் சேற்றினுலும் கட்டப்படுகின்றன. கெட்டியாய் இருப்பதற்காகச் சுண்ணும்பும், வெயில் காலத்தில் உலர்ந்து வெடிக்காமலிருப்பதற்காகச் சேறும், கட்டிடங்களுக்கு உபயோகப்படுத்தப் படுகின்றன. இது போலவே, சரீரத்தைத் தாங்குவதற்கும், சரீரத்தை நீடித்த நாள் நிலை பெறச் செய்வதற்கும் பெரிதும் பயன்படும் எலும்புகளும், சுண்ணும்புச் சத்தினுலும், பிசுபிசுப்பான ஒருவகைச் சத்தினுலும் அமைந்திருக்கின்றன. எலும்பிலுள்ள சுண்ணும்புச் சத்து அதற்கு உறுதியையும் பலத்தையும் கொடுக்கிறது. எலும்பில் வச்சிரம்போல் அமைந்துள்ள பிசுபிசுப்பான திரவபதார்த்தம், எலும்புகள் சீக்கிரம் ஒடிந்து போகாமலும் முறிந்து போகாமலும் காக்கிறது. தவிர, வீடுகட்டுகிறவர்கள் சுண்ணும்பைப் பக்குவமான நிலையில் வைப்பதற்காகச் சுண்ணும்பு குழைக்கும்போது வெல்லத்தைத் தண்ணீரிற் கரைத்து அதில் ஊற்றிக் குழைப்பதை நீ பார்த்திருக்கலாம். இது போலவே, எலும்பில் சம்பந்தப்பட்டிருக்கும் சுண்ணும்பு, பதங் கெடாமலிருப்பதற்குச் சாதகமாக எலும்பில் தித்திப்பான ஒருவகைச் சத்து கலந்திருக்கிறது நாய் முதலிய மிருகங்கள், எலும்புகளை மிகுந்த விருப்பத்துடன் கடித்துத் தின்பதற்குக் காரணம், எலும்பில் அமைந்திருக்கும் தித்திப்பேயாகும். இரத்த நரம்புகள் ஓடுவதற்கு ஏற்ற சிறிய துவாரங்கள் இந்த எலும்பில் அமைந்திருக்கின்றன. குழந்தைகளினுடைய எலும்பில் சுண்ணும்புச் சத்து குறைந்தும், பிசுபிசுப்பான திரவபதார்த்தம் அதிகமாயுமிருப்பதால், குழந்தைகளின் எலும்புகள் சுலபமாய் வளைகின்றன. வயது முதிர்ந்தவர்களுடைய எலும்புகளில் சுண்ணும்புச் சத்தே அதிகமாக இருப்பதால் அவை வளைய மாட்டா; முறிந்து போம். மக்களுடைய சரீரத்தில் சுமார் 240 எலும்புகளுக்கு மேலிருக்கின்றன. தேகத்தில் பல நுண்ணிய கருவிகள் அமைந்திருக்கின்றனவாதலால்,

---

* இவ்வதிகாரத்தில் வரும் தேக தத்துவ சம்பந்தமான விஷயங்களிற் பெரும்பாலன ஆங்கில பாஷையில் மிஸ்டர் பீல் (Beal) என்பவராலும் மிஸ்டர் டிரால் (Trall) என்பவராலும் இயற்றப்பெற்ற தேக தத்துவ நூல்களில் (Physiology) சொல்லப்படும் சிற்சில விஷயங்களைத் தழுவி எழுதப்பட்டனவாகும்.

அவைகளுக்குக் கெடுதி நேராவண்ணம் இந்த எலும்புகள் பாதுகாக்கின்றன. எலும்பில் பெரிய துவாரங்கள் ஏற்பட்டு அவைகளின் வழியாய், மூளையிலுள்ள தித்திப்பு நீர் அளவுக்கு அதிகமாய் வெளிப்படுவதுதான் 'மதுமேகம்' 'நீரிழிவு' என்று சொல்லப்படும். இவ்வியாதி, எலும்பை உருக்கி விடுவது முண்டு. எலும்புகள் சரியாய்ப் பாதுகாக்கப்படாவிட்டால், சரீரத்தின் மற்ற நுட்பமான கருவிகள் சீர் குலைந்து போம். ஆதலால் எலும்பினுள் கலந்திருக்கும் சுண்ணாம்புச் சத்து அதிகமாய் விரயமாகாதபடியும், எலும்பினுள் அமைந்திருக்கும் சிறிய துவாரங்கள் விசாலமடையாதபடியும், நாம் பாதுகாக்க வேண்டும். போக காலத்தில் வெளிப்படும் விந்துவில், எலும்பிலுள்ள சுண்ணாம்புச் சத்து அதிகமாய்க் கலப்பதால், கலவியில் ஜாக்கிரதையாயும் மிதமாயும் இருந்து வந்தால், எலும்பிலுள்ள சுண்ணாம்புச்சத்து விபர்த்தமாகாமல், எலும்பு உறுதியும் பலமுமடையும். தித்திப்புப் பண்டங்களை அதிகமாய் உண்ணாம லிருந்தால் நீரிழிவு வியாதியைத் தடுக்கலாம். அதாவது இயற்கையிலேயே அதிகமான தித்திப்பு அமைந்திருக்கும் காய் கனி கிழங்குகளையும் தானியங்களையும் மிதமாக உண்ணவேண்டும். செயற்கைத் தித்திப்புப்பண்டங்களை,—அதாவது கற்கண்டு, சர்க்கரை போன்றவைகளை,—அளவுக்கு அதிகமாய்ச் சேர்ப்பதனுற் பாதகமின்று. ஏனெனில், இயற்கைத் தித்திப்பு எவ்வளவு அதிகமாயும் தீவிரமாயும் இரத்தத்தில் கலக்கிறதோ அவ்வளவு அதிகமாயும் தீவிரமாயும் செயற்கைத் தித்திப்பு இரத்தத்தில் கலக்கிறதில்லை." என்று நான் காந்திமதிக்கு எடுத்துரைத்தேன்.

"வைத்தியரே! இவ்விதமாகவே மற்றத் தாதுக்களைப் பற்றியும் சுருக்கமாகக் கூறும்" என்று காந்திமதி கேட்டாள்.

"எலும்புகளை மூடிக்கொண்டும், அவைகளைச் சுற்றிக்கொண்டும், தனித்தும் இருக்கின்ற தடிப்பான மாமிசமே சதை என்று சொல்லப்படும். இந்த மாமிசங்கள் சிவப்பாயும், வெங்காயத் தோலைப்போல் அடுக்கடுக்காயு மிருக்கும். சில மாமிசங்கள் நீண்டும் சில அகன்று மிருக்கும். நம்முடைய சரீரத்தில் அமைந்திருக்கும் சதைகள் 'தாமே இயங்கும் சதைகள்', 'மனத்தின் வழிப்பட்டு இயங்கும் சதைகள்' என இருவகைப்படும். இரைப்பை, இருதயம், குடல் முதலிய சதைத்துண்டுகள் மனம் அறிவித்தாலும் அறிவிக்காவிட்டாலும் தாமே இயங்குகின்றன. நித்திரை புரியும் போதும் உண்ட ஆகாரம் ஜீரணமாவது இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். நீட்டல், முடக்கல், நடத்தலாதிய இத்தகைய தொழில்கள் சதையின் இயக்கத்தினுல் நடை பெறுகின்ற வேனும், மனம் நினைத்தாற்றான் இத்தொழில்கள் நடக்கின்றனவாதலால் சதைகளின் இந்த இயக்கம் "மன வழிப்பட்ட இயக்கம்" என்று சொல்லப்படும். நம்முடைய சரீரம், நாம் நினைக்கிறபடி இயங்குவதற்கு மாமிசத்தின் பலனும் ஒரு முக்கிய சாதனமாகும். கெட்டியாயும் பெரிதாயு மிருக்கும் எலும்புகளைத்

[library stamp]

THE WORLD FAMOUS "SANTHANATHI" THAILAM.

K.R.V.& Co KUMBAKONAM

பல கண்காட்சிகளில் தங்கம் வெள்ளி மெடல்கள் முதன்மையான யோக்யதா பத்திரங்கள் நற்சாட்சிப்பத்திரங்கள் பரிசுபெற்று உலகப்பிரசித்தியுடன் விளங்கிவரும் அற்புத குணங்கள் அமையப் பெற்ற எங்கள் சுகந்த "சந்தனாதித்தைலத்தை" ஒரு முறை வாங்கிப் பரிட்சை செய்யுங்கள். ஒரு முறை ஸ்நாநத்திலேயே கண்ணுக்கு குளிர்ச்சியும் பிரகாசமும் இன்னும் மற்ற குணங்களையும் காணலாம். சிறுவர் பெரியோர் எல்லாரும் எந்த தேசத்திலும் யாதொரு சந்தேகமுமின்றி உபயோகிக்கக் கூடியது. எளியோர் முதல் உபயோகிக்கும்படி குறைவான விலைக்கே விற்று வருகிறோம்

18 பலம் கொண்ட டின் 1க்கு		விலை ரூ	2—0—0.
,,	கால் டெசன்	,,	5–10—0.
,,	அரை ,,	,,	10—8—0.
,,	ஒரு ,,	,,	20—0—0.

[வி. பி. சார்சு பிரத்தியேகம்]

பினாங்கு சிங்கப்பூர் முதலிய ஸ்டரயிட் செட்டில்செண்டு நாடுகள் தவிர மற்ற அன்னிய நாடுகளுக்கு வி. பி இல்லாததால் அவிடத்திலுள்ளவர்கள் அடியிற்கண்ட விவரப்படி முன்பணம் அனுப்பவேண்டும்.

18 பலம் கொண்ட டின் 1க்கு		விலை ரூ	3—0—0
,,	கால் டெசன்	,,	8—8—0
,,	அரை ,,	,,	16—0—0
,,	ஒரு ,,	,,	29—8—0

அரகஜா, அம்பர், புனுகு, ஜவ்வாது, வில்லை, கேசரிபவுடர், ஊதுவர்த்தி, வாசனைப்பாக்கு, வாசனைச்சுண்ணாம்பு, கொப்பரைச்சீவல், வாசனைச்சந்தனம், அத்தர்கள், செண்டுகள், தாதுபுஷ்டி ரோஜாப்பூ குல்கந்து, பலகாய்கறி ஊறுகாய்கள் முதலிய பலவித சாமான்கள் இந்தக்கம்பெனியில் கிடைக்கும்.

காட்லாக்கு இனாமாக அனுப்பப்படும்.

ஸ்ரீநிவாஸய்யங்கார்,

(K. R. V. & Co.,) கே. ஆர். வி. அன் கோ.,

அத்தர் வியாபாரிகள், பெரியக்கடை,

1

கும்பகோணம்.

ADVERTISEMENT.

பட்டு பீதாம்பர கம்பெனி. ஸ்ரீகாசி.

திருப்தியில்லாதனைத் திரும்பப்பெற்றுக் கொள்ளலாம். **Silk Pitamber Co Benares City.** பட்டு பீதாம்பரக காட்லாக் இனமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள் பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப் படவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33உள்ளது, கண்டி 1க்கு ரூபா 1முதல்10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது, கண்டி 1க்குஅணா 10 முதல் ரூபா 10வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாக இருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப்பெற்றுக்கொள்ளப்படும்.

வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயமுத்தூர் சேலம் வேஷ்டிகள் மாதிரி ஸன்னக்கம்பி ருத்திராக்ஷ கம்பி ஜரிகை கம்பி போட்டவை.

4 முழம்	2 அகலம்		1-க்கு	ரூபா.	4-8	முதல்	7	வரை.
6 ,,	$2\frac{1}{2}$	,,	1-க்கு	,,	7	,,	9	,,
6 ,,	3	,,	1-க்கு	,,	10	,,	12	,,
7 ,,	$2\frac{1}{2}$	,,	1-க்கு	,,	8	,,	12	,,
7 ,,	3	,,	1-க்கு	,,	10	,,	14	,,
8 ,,	3	,,	1-க்கு	,,	12	,,	18	,,
9 ,,	3	,,	1-க்கு	,,	14	,,	20	,,
10 ,,	4	,,	1-க்கு	,,	15	,,	22	,,

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6 முழம் நீளம் 3 முழம் அகலம் சிவப்பு முதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1க்கு ரூபா 5—8—0. ஷை சிறந்து 1-க்கு ரூபா 4—8—0 மேக வர்ணப் போர்வை 1க்கு ரூபா 6—8—0. தபால் செலவு பிரத்தியேகம்.

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 100-க்கு	...	...	3	0	0
2-வது நெம்பர் 100-க்கு	...	...	2	8	0
3-வது நெம்பர் 100-க்கு	:	...	2	0	0
4-வது நெம்பர் 100-க்கு	...	...	0	6	0

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால்செய்த செம்பு, குடம் கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும், நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்குரூபா 2, பெரியசெட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள். விலாசம் மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, தாராநகர் தெரு, காசி

Manager, Silk Pitamber Co.,

5 Dharanagar Street, Benares City.